
JESUS REDEEMS MINISTRIES

# வாலிபர் உலகம்

Volume: 15 | Issue: 07 | September 2026 | Mohan C. Lazarus | Annual Subscription: ₹ 100 | Single Copy: ₹ 10



தவறான ஆலோசனைகளையும்
தீமையான காரியங்களையும்
வெறுத்து;
நல்ல ஆலோசனைகளையும்,
காரியங்களையும்

# கற்றுக்கொள்!

## உள்ளே!



4



12




22

# வாலிபர் உலகம்

**வாலிபர்களே!**

உங்கள் ஆவிக்குரிய வாழ்வில் விழிப்புணர்வையும் மாற்றத்தையும் உருவாக்கும் இந்தப் பத்திரிக்கையை ஒவ்வொரு மாதமும் முழுமையாக வாசித்து, உங்கள் நண்பர்களுக்கும் வாசிக்கக் கொடுங்கள்.




1 ஆண்டுக்கு ரூ.100/-

15 ஆண்டுகளுக்கு ரூ.1000/-

**வாலிபர் உலகம் பத்திரிக்கைக்கான சந்தா அல்லது காணிக்கை செலுத்திய பின், 9750955547 என்ற எண்ணிற்கு தகவல் அனுப்பி உறுதிப்படுத்தவும்.**

**"வாலிபர் உலகம்" மாதாந்திர பத்திரிக்கை தமிழ், ஆங்கிலம், மலையாளம், ஹிந்தி ஆகிய மொழிகளில் வெளியிட்டு வருகிறோம்.**

Scan ME


JESUS REDEEMS MINISTRIES

இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம், நாலுமாவடி, தூத்துக்குடி - 628 211.

Phone: 04639-353333 | Cell:9750955547 | E-mail: youth@jesusredeems.org

www.jesusredeems.com | youth.jesusredeems.com

# தலைவாசல்



*எனக்கு அன்பான வாலிபர்களே,*

***இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்!***

**வாலிபர்களாகிய நீங்கள் பெலவான்களாய் இருக்கிறீர்கள்** (1 யோவான் 4:4). உலகத்தில் இருப்பவனைப் பார்க்கிலும் உங்களில் இருப்பவர் மிகவும் பெரியவர் என்பதை நீங்கள் ஆழமாக விசுவாசிக்க வேண்டும். உங்களுக்குள் வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியானவர் சகலத்தையும் உங்களுக்குப் போதித்து, உங்களை வழிநடத்துவார்.

நாம் வாழ்கின்ற இந்த உலகில், தவறான போதனைகளும், வேதத்திற்குப் புறம்பான கருத்துக்களும் அதிகமாகப் பரப்பப்பட்டு வருகின்றன. மேலும், வாலிப சமுதாயத்தில் தீமையான காரியங்களையும், தவறான கலாச்சாரத்தையும் வேகமாகப் பரப்புவதற்காக சாத்தான் ஒரு கூட்டத்தைத் தீவிரமாக எழுப்பிக் கொண்டிருக்கிறான். எனவே, தவறான போதனைகளிலிருந்தும், கள்ள ஆராதனைகளிலிருந்தும் உங்களை விலக்கிக் காத்துக்கொள்வது மிகவும் அவசியம்.

இப்படிப்பட்ட சூழலில், நீங்கள் வேத வார்த்தையில் கைத்தேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். உண்மையான எழுப்புதலுக்கும், பொய்யான எழுப்புதலுக்கும் உள்ள வித்தியாசத்தை அறிந்திருக்க வேண்டும். உண்மையான ஆராதனை எது, கள்ள ஆராதனை எது என்பதையும் தெளிவாகப் புரிந்திருக்க வேண்டும்.

வாலிபனே, **"பிரயோஜனமாய் இருக்கிறதை உனக்கு போதித்து, நீ நடக்க வேண்டிய வழியிலே உன்னை நடத்துகிற உன் தேவனாகிய கர்த்தர் நானே"** (ஏசாயா 48:17) என்று தேவன் கூறுகிறார்.

**வாலிபனே, நீயும் பவுலைப்போல வைராக்கியத்துடன் எழுந்து, சுவிசேஷத்தை உன் வாலிப சமுதாயத்திற்குப் போதிக்க வேண்டும்.**

- கலாத்திய சபையில் காணப்பட்ட வித்தியாசமான சுவிசேஷத்தைக் பவுல் கடிந்துகொண்டார்.
- கொரிந்து சபையில் காணப்பட்ட பாவ உறவுகளைக் கடிந்துகொண்டார்.
- தீமோத்தேயுவுக்கு எழுதியபோது, கள்ள போதனைகளிலிருந்து விலகியிருக்கும்படி போதித்தார்.

அப்போஸ்தலர் நாட்களில் பவுல் தேவ வைராக்கியத்தோடு எழுந்ததுபோல,

**இன்று நீயும் இந்த இழிவான காரியங்களைத் தடுக்க, எழுந்து செயல்பட வேண்டும்.**

நீ காத்திருந்து பெலப்பட்டு செயல்படும்போது, இந்தத் தீமையான கிரியைகளை முற்றிலும் அழிக்க முடியும். உலகம் முழுவதும் பரவவேண்டியது பொய்யான எழுப்புதல் அல்ல, தேவனால் உண்டாகும் உண்மையான எழுப்புதல் மட்டுமே வெடித்துச் சிதறி பரவி பாய வேண்டும்.

**கிறிஸ்துவின் பணியில்**
**மோகன் சி. லாசரஸ்**



சாட்சி: தொகுப்பு: காட்வின்

# மரணத்தின் விளிம்பிலிருந்து!!







### உங்கள் குடும்பப் பின்னணி மற்றும் சிறுவயது பற்றிக் கூற முடியுமா?

என்னுடைய பெயர் திலானி மோனிஷா. நான் இலங்கை நாட்டின் **Badulla** மாவட்டத்தில் உள்ள பஷர் என்ற மலைக் கிராமத்தைச் சேர்ந்தவள். எனது பெற்றோர் இருவரும் ஆசிரியர்கள். எனக்கு ஒரு தங்கையும் இருக்கிறாள்.

நான் ரோமன் கத்தோலிக்கக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தேன். எட்டாவது வயதில் என் பெற்றோர் பிரிந்ததால், என் அம்மா தனியாக எங்களை வளர்த்துப் படிக்க வைத்தார்கள். சிறுவயதிலிருந்தே **IT** துறையில் **Software Engineer**ஆக வேண்டும் என்பதே என்னுடைய கனவாக இருந்தது. அதற்காக மிகவும் ஆர்வத்துடனும் விடாமுயற்சியுடனும் படித்து வந்தேன்.

### சரி... நன்றாகப் படித்து IT துறையில் சாதிக்க உங்களுக்கு வந்த தடை என்ன?

2016-ஆம் ஆண்டு, 11-ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தபோது, எனக்கு ஞாபக மறதி மற்றும் **Urine Infection** ஏற்பட்டது. அடுத்த ஆண்டு 12-ஆம் வகுப்பில் இருந்தபோது, வயிற்றின் வலது பக்கத்தில் கடுமையான வலி, வாந்தி, கால்வீக்கம், உடல் சோர்வு போன்ற பிரச்சினைகள் தொடர்ந்து ஏற்பட்டன. அந்த வலியைத் தாங்கவே முடியாத நிலை இருந்ததால், என்னுடைய படிப்பும் மிகவும் பாதிக்கப்பட்டது. மருத்துவர்கள் **Scan** செய்து பார்த்தபோது, பிறவியிலிருந்தே என்னுடைய ஒரு **Kidney** சரியாக வளராமல், செயலிழந்த நிலையில் இருப்பதாகவும், அது மற்றொரு **Kidney**-யைவிட மிகவும் சிறியதாக இருப்பதாகவும் தெரிவித்தார்கள்.



### இதைக் கேட்டவுடன் உங்களுக்கு எப்படி இருந்தது? தொடர்ந்து என்ன செய்தீர்கள்?

என்னுடைய எதிர்காலக் கனவுகள் அனைத்தும் சிதறிப்போனதாக உணர்ந்தேன். மருத்துவர்கள், மற்றொரு **Kidney**-யும் பாதிக்கப்படத் தொடங்கியிருப்பதாகவும், பாதிக்கப்பட்ட **Kidney**-யை அகற்றி **Kidney Transplant** செய்யாவிட்டால் உயிருக்கு ஆபத்து என்றும் கூறினார்கள். என்னைக் காப்பாற்றுவதற்காக என் அம்மா தன்னிடம் இருந்த நகைகள், சேமிப்பு அனைத்தையும் விற்று சிகிச்சை அளித்தார்கள். பின்னர் வங்கியில் கடன் வாங்கியும் சிகிச்சையைத் தொடர்ந்தார்கள்.



அந்த நேரத்தில் எனக்கு உண்மையான தேவனைப் பற்றிய அறிவு இல்லை. நாங்கள் பல பரிகாரங்கள் செய்தோம். இந்தியாவிற்குக்கூட வந்து பல முயற்சிகளை மேற்கொண்டோம். ஆனால் எதுவும் பலனளிக்கவில்லை. 2018-ஆம் ஆண்டு ஜுன் 8-ஆம் தேதி எடுத்த **Scan**-க்குப் பிறகு, **Kidney Transplant** செய்ய மருத்துவர்கள் தயாராகும்படி கூறினார்கள். ஆனால் அதற்கு முந்தைய நாள், ஜுன் 7-ஆம் தேதியை என் வாழ்க்கையின் கடைசி நாளாக முடிவு செய்து, தற்கொலை செய்து கொள்ளத் தீர்மானித்திருந்தேன்.

## ஏன் தற்கொலை செய்து கொள்ளத் தீர்மானித்தீர்கள்? நீங்கள் குறித்திருந்த நாளில் என்ன நடந்தது?

ஜுன் 6-ஆம் தேதி, உறவினர் ஒருவர் சகோதரர் மோகன் சி. லாசரஸ் அவர்கள் பதுளை பகுதியில் நடத்தும் கூட்டத்திற்கு எங்களை அழைத்துச் சென்றார். நான் ரோமன் கத்தோலிக்கப் பின்னணியில் வளர்ந்ததால், தேவனைப் பற்றி அறிந்துகொள்ள எந்த ஆர்வமும் இல்லை. அம்மாவின் கட்டாயத்திற்காக மட்டுமே அந்தக் கூட்டத்திற்குச் சென்றேன். கூட்டத்தில் இருந்தாலும், மறுநாள் தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம்தான் என் மனதில் இருந்தது. தேசத்திற்காக ஜெபம் நடைபெற்றுக் கொண்டிருந்து. ''நமக்காக ஜெபிக்க மாட்டார்கள்'' என்று நினைத்து வெளியே செல்ல முயன்றேன். ஆனால் கூட்ட நெரிசலால் வெளியே வர முடியவில்லை. அப்போது சகோதரர் மோகன் சி. லாசரஸ் அவர்கள், ''ஒரு வாலிபப் பெண் தற்கொலை ஆவியால் கட்டப்பட்டிருக்கிறீர்கள். முன்பாக வாருங்கள். இதுதான் உங்களுடைய விடுதலையின் நாள், இன்று உங்கள் வாழ்க்கை மாறப்போகிறது'' என்று அழைத்தார்கள். அந்த வார்த்தையைக் கேட்டவுடன், எப்படியென்றேத் தெரியவில்லை; அடுத்த நொடியே மேடைக்கு முன்பாகச் சென்று நின்றிருந்தேன்.

ஜெபத்தின் போது, என் இருதயம் வெடித்து இரத்தம் பாய்வது போன்ற உணர்வு ஏற்பட்டது. பதற்றத்துடன் பார்த்தபோது எதுவும் நடக்கவில்லை. அது ஒரு உணர்வாக மட்டுமே இருந்தது. ஜெபம் முடிந்த பிறகு நாங்கள் வீட்டிற்குத் திரும்பினோம்.

## ப்பா... யோசித்துப் பார்க்கவே முடியவில்லை. சரி, வீட்டிற்குப் போன பிறகு உங்களுடைய மனநிலை எப்படி இருந்தது?

அந்த இரவு முழுவதும் எனக்குத் தற்கொலை எண்ணமே வரவில்லை.







அதற்குப் பதிலாக, இதுவரை அனுபவித்திராத ஆழமான சமாதானமும் விவரிக்க முடியாத மகிழ்ச்சியும் என் இருதயத்தை நிரப்பியது. அடுத்த நாள் CT Scan எடுக்க மருத்துவமனைக்குச் சென்றோம். Report-ஐப் பார்த்து Senior Doctors ஆச்சரியமடைந்தார்கள். முன்பு பாதிக்கப்பட்ட சிறுநீரகத்தில் வளர்ந்து கொண்டிருப்பதாகக் கூறப்பட்ட Cell-க்கான எந்த அடையாளமும் இந்த புதிய Scan-ல் இல்லை என்று தெரிவித்தார்கள். இன்று வரை கர்த்தர் என்னை முழுமையான சுகத்துடன் வைத்திருக்கிறார்.

**இவ்வளவு பெரிய அற்புதம் நடந்தது என்று சொல்கிறீர்கள். ஆனால் உங்களுக்கு கடவுள் நம்பிக்கையே இல்லையே! அப்படியிருக்க, இயேசு கிறிஸ்துவே உண்மையான தேவன் என்பதை எப்படி அறிந்துகொண்டீர்கள்?**

அது எப்படி நடந்தது என்று இன்றுவரை எனக்கே புரியவில்லை. இந்த அற்புதம் நடந்த சில நாட்களுக்குப் பிறகு, ''உண்மையான கடவுள் யார்? ஏன் இத்தனை நாட்களாக அவரை அறியாமல் இருந்தேன்? ஏன் இவ்வளவு கஷ்டங்களுக்குப் பிறகு இந்தச் சுகத்தை அனுபவிக்கச் செய்தார்?'' என்ற கேள்விகள் என் மனதில் எழ ஆரம்பித்தன. அப்போது ஏசாயா 41:10ம் வசனம் என் நினைவுக்கு வந்தது. என்னிடம் ரோமன் கத்தோலிக்க வேதாகமம் மட்டுமே இருந்தது. அதை வாசித்தபோது, **''பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்...''** என்ற வசனம் யாரோ என்னிடம் நேரடியாகப் பேசுவது போல என் உள்ளத்தில் ஒலித்தது.

அந்த நேரத்தில், ''வானத்தையும் பூமியையும் படைத்த நான், உன்னுடைய இந்தச் சிறிய அவயவத்தைப் புதிதாக உருவாக்க எவ்வளவு நேரம் ஆகும்'' என்று ஆண்டவர் என்னிடம் பேசினார். நான், ''நீர் யார்'' என்று கேட்டபோது, ''நான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து'' என்று என் உள்ளத்தில் உணர்த்தினார். அந்த நிமிடத்தில் நான் அடைந்த சமாதானத்தையும் சந்தோஷத்தையும் வார்த்தைகளால் விவரிக்க முடியாது.

**சூப்பர்... கடவுள் நம்பிக்கை இல்லாத உங்களுக்கு, இயேசுவே உண்மையான தேவன் என்பதை வெளிப்படுத்தினார். அதற்குப் பிறகு இயேசுவை ஏற்றுக்கொண்டீர்களா?**

ஆம். அந்த அனுபவத்திற்குப் பிறகுதான் நான் பாவ உணர்வடைந்தேன். நான் செய்த எல்லாப் பாவங்களையும் ஆண்டவரிடம் அறிக்கையிட்டு ஜெபிக்க ஆரம்பித்தேன். பாவமன்னிப்பு இயேசு கிறிஸ்துவின் மூலமாக மட்டுமே கிடைக்கும் என்பதை அப்போதுதான் அறிந்துகொண்டேன்.

அதன்பிறகு ஆண்டவருடைய வழிகளை அறிந்துகொள்ள ஆர்வம் ஏற்பட்டது. சகோதரர் மோகன் சி. லாசரஸ் அவர்களின் செய்திகளின் மூலம் ஜெப வாழ்க்கையைக் கற்றுக்கொண்டேன். பின்னர் பரிசுத்த வேதாகமத்தை வாங்கி தொடர்ந்து வாசிக்க ஆரம்பித்தேன். 2018-ஆம் ஆண்டு ஆண்டவர் எனக்குப் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும் தந்தார்.

**சரி... சுகம் கிடைத்தது, அபிஷேகமும் பெற்றுக்கொண்டீர்கள். அதன் பிறகு ஆண்டவருக்காக ஊழியம் செய்ய ஆரம்பித்தீர்களா?**

ஆரம்பத்தில் இல்லை. என் அம்மா, உறவினர்கள் மற்றும் பலர், ''சுகம் கிடைத்தாலும் நம்முடைய சர்ச்சில்தான் இருக்க வேண்டும்''





என்று கூறி, வெளியே செல்லாமல் இருக்க பல பொறுப்புகளையும் கொடுத்தார்கள். இதனால் பல எதிர்ப்புகளையும் போராட்டங்களையும் சந்திக்க வேண்டியிருந்தது. அந்த நேரத்தில், இரட்சிக்கப்பட்டிருந்த என் தாத்தா பயன்படுத்திய வேதாகமம் எனக்குக் கிடைத்தது. அதிலிருந்த குறிப்புகளும் வசனங்களும் ஆண்டவரை இன்னும் ஆழமாக அறிந்துகொள்ள உதவின. அப்போதுதான் இயேசு கிறிஸ்துவே உண்மையான தேவன் என்ற உறுதியான விசுவாசம் என் உள்ளத்தில் உருவானது.

அதன்பிறகு, என்னால் முடிந்த அளவுக்கு ஆண்டவருக்காக ஊழியம் செய்ய ஆரம்பித்தேன். இதனால் குடும்பத்தினரின் எதிர்ப்பையும் புறக்கணிப்பையும் சந்தித்தேன். இருந்தாலும், மனிதர்கள் என்னை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், இயேசு கிறிஸ்து என்னைத் தமது பிள்ளையாக ஏற்றுக்கொண்டார்.

2019-ஆம் ஆண்டு என் அம்மாவும் தங்கையும் இரட்சிக்கப்பட்டார்கள். அதற்கு பிறகு பல ஊழியங்களில் பங்கேற்று, ஆண்டவர் கொடுத்த வெளிப்பாடுகளின் மூலம் பலருக்கு ஆசீர்வாதமாக இருக்கக் கிருபை கிடைத்தது. 2020-ஆம் ஆண்டு ஆண்டவர் என்னை வேதாகம கல்லூரிக்குச் சென்று படிக்கச் சொன்னதன் நிமித்தம், 2021-ஆம் ஆண்டு **D.Th.**, படிப்பை முடித்து இலங்கையில் ஒரு ஊழியத்தோடு இணைந்து பணியாற்றினேன். பின்னர் ஆண்டவரின் வழிநடத்துதலின்படி, தற்போது ஒரு தொண்டு நிறுவனத்தில் 1,854 குழந்தைகளுக்கு ஆசீர்வாதமாக இருந்து வருகிறேன். மேலும், 1% கூட சுவிசேஷம் போகாத மக்கள் வாழும் பகுதிகளுக்குச் சென்று ஒரு மிஷனெரியைப் போல் சுவிசேஷத்தை அறிவிக்கும் பாக்கியத்தையும் ஆண்டவர் எனக்குத் தந்திருக்கிறார்.

## இந்தச் சாட்சியின் மூலம் நீங்கள் சொல்ல விரும்பும் செய்தி என்ன?

என்னுடைய வாழ்க்கை முழுவதும் கனவுகளால் நிரம்பியிருந்தது. ஆனால் நோய் வந்தபோது, எல்லாமே முடிந்துவிட்டதாக நினைத்தேன். மருத்துவர்களின் தீர்ப்பும், ஜாதகமும், குறிசொன்னவர்களின் வார்த்தைகளும், ‘‘20 வயதுக்கு மேல் உயிரோடு இருக்கமாட்டாய்’’ என்ற பயத்தை என் மனதில் ஆழமாகப் பதித்தன. அதுவே என்னை தற்கொலை முடிவிற்கு தள்ளியது. ஆனால், மனிதர்கள் என் வாழ்க்கைக்கு முடிவு கூறிய இடத்தில், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எனக்கு ஒரு புதிய தொடக்கத்தைக் கொடுத்தார். இன்று நான் உயிரோடும், ஆரோக்கியத்தோடும், ஆண்டவருக்காக ஊழியம் செய்து கொண்டிருப்பதும் அவருடைய கிருபையினால்தான்.

இந்தச் சாட்சியை வாசிக்கும் உங்களில் யாராவது, ‘‘எல்லாமே முடிந்துவிட்டது’’ என்று நினைத்துக் கொண்டிருந்தால், மனம் தளராதீர்கள். என் வாழ்க்கையை மாற்றிய அதே ஆண்டவர் உங்கள் வாழ்க்கையையும் மாற்ற வல்லவர். மனிதர்களின் தீர்ப்பைக் காட்டிலும், மருத்துவர்களின் அறிக்கையைக் காட்டிலும், தேவனுடைய வார்த்தையே உயர்ந்தது.

அவர் சொன்னால்; **முடியாததும் முடியும். இழந்தது திரும்பக் கிடைக்கும். மரணத்தின் விளிம்பில் இருந்த வாழ்க்கைக்குக்கூட புதிய தொடக்கம் கிடைக்கும்.**

எனவே, எந்தச் சூழ்நிலையிலும் நம்பிக்கையை இழந்துவிடாதீர்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை முழு இருதயத்தோடு நம்புங்கள். அவர் உங்களை ஒருபோதும் கைவிடமாட்டார்; உங்கள் வாழ்க்கைக்கும் நிச்சயமாக ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கிவைப்பார்.

**“பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் செய்வேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்.”**
**(ஏசாயா 41:10)**





# தேவனின் தெரிந்துகொள்ளுதல்!

**"நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படித் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்"** (1 பேதுரு 2:9).

**"நீங்கள் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததி"** என்று பரிசுத்த ஆவியானவர் உங்களைக் குறித்து கூறுகிறார். ஆண்டவர் உங்களை மட்டுமல்ல, உங்கள் சந்ததியையும் தெரிந்துகொண்டிருக்கிறார்.

இந்த உலகம் ஜலப்பிரளயத்தால் அழிக்கப்பட்டபோது, தேவன் நோவாவை மட்டும் தெரிந்துகொள்ளவில்லை; நோவாவின் முழுக் குடும்பத்தையும் தெரிந்துகொண்டு, அவரது சந்ததியை மீட்டார். ஜலப்பிரளயத்திற்குப் பிறகு, **"பூமியில் மனித சந்ததி பெருக வேண்டும்"** என்ற தமது திட்டத்தை நிறைவேற்றுவதற்காகவே தேவன் நோவாவையும் அவரது குடும்பத்தையும் தெரிந்துகொண்டார்.

தேவாதி தேவன் இந்த உலகத்தில் அவதரிக்க வேண்டியிருந்ததால், ஒரு ஜாதியைப் பிரித்தெடுத்து, பரிசுத்தப்படுத்தி, ஆயத்தப்படுத்துவதற்காக ஆபிரகாமை தெரிந்துகொண்டார். இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் ஊழியம் செய்த நாட்களில் அநேகர் அவரைப் பின்பற்றினார்கள். பலர் அவருடன் இருக்க விரும்பினார்கள். ஆனால், அந்தப் பெருங்கூட்டத்திலிருந்து ஆண்டவர் பன்னிரண்டு பேரை மட்டும் தெரிந்துகொண்டார்.

**"அவர் பன்னிரெண்டுபேரைத் தெரிந்துகொண்டு, அவர்கள்தம்மோடுகூட இருக்கவும், பிரசங்கம்பண்ணும்படியாகவும், வியாதிகளைக் குணமாக்கவும், பிசாசுகளைத் துரத்தவும் அதிகாரமுள்ளவர்களாயிருக்கும்படியாகவும் அவர்களை ஏற்படுத்தினார்"** (மாற்கு 3:14-15).

அதேபோல், இயேசுவுக்கு விரோதமாகச் செயல்பட்டுக் கொண்டிருந்த சவுல் என்ற ஒரு வாலிபனை ஆண்டவர் சந்தித்து, அவனைத் தெரிந்துகொண்டு, பின்னர் வல்லமையாகப் பயன்படுத்தினார்.

பிரியமான வாலிபர்களே, நீங்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் சரி, இன்று தேவனுடைய கண்கள் உங்கள்மேல் பதிந்துள்ளன. அவருடைய தெரிந்துகொள்ளுதல் மிகவும் ஆச்சரியமானது. அவருடைய அன்பும் அளவற்றது. அவருடைய தெரிந்து



செய்தி: மோகன் சி. லாசரஸ்

கொள்ளுதலை எந்த மனிதனாலும் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது.

**“நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்குமுன்னே உன்னை அறிந்தேன்... நான் உன்னைப் பரிசுத்தம்பண்ணி, ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன்”** (எரேமியா 1:5).

அதேபோல், **“உலகத்தோற்றத்திற்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டார்”** (எபேசியர் 1:4).

தாயின் கருவில் நீங்கள் உருவாகிக்கொண்டிருந்தபோதே, ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக கர்த்தர் உங்களைத் தெரிந்துகொண்டு சிருஷ்டித்தார்.

ஒரு சமயம், ஒரு வாலிபன் ஜெபிக்கும்படி ஒரு குடும்பத்தை என்னிடம் அழைத்து கொண்டு வந்தான். நான் அந்தக் குடும்பத்திற்காக ஜெபித்துக்கொண்டிருந்தபோது, அந்த வாலிபன் சற்றுத் தள்ளி நின்றுகொண்டிருந்தான். அவனைப் பார்த்தவுடனே ஆண்டவர் என்னிடம், **“நான் அவனைத் தெரிந்துகொண்டிருக்கிறேன். அவன் என்னுடைய ஊழியத்தைச் செய்வான். நான் அவனை வல்லமையாகப் பயன்படுத்துவேன்”** என்று பேசினார்.

ஜெபத்தை முடித்தபின், நான் அவனிடம், **“தம்பி, கர்த்தர் உங்களைத் தெரிந்துகொண்டிருக்கிறார். உங்களை அநேகருக்கு ஆசீர்வாதமாகப் பயன்படுத்துவார்”** என்று சொன்னேன். அதற்கு அவன், **“நான் நன்றாகக் குடித்துக்கொண்டும், சிகரெட் பிடித்துக்கொண்டும் ஜாலியாக இருக்கிறேன். இப்படிப்பட்ட என்னை இயேசு பயன்படுத்துவாரா?”** என்று கிண்டலாகச் சிரித்துவிட்டு சென்றுவிட்டான்.

ஆனால், இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, கையில் வேதாகமத்துடன் என்னைச் சந்தித்தான். தேவன் தன் வாழ்க்கையை முற்றிலும் மாற்றி, தன்னை ஒரு ஊழியக்காரனாக மாற்றிய விதத்தை மகிழ்ச்சியுடன் பகிர்ந்துகொண்டான். உண்மையில், கர்த்தருடைய தெரிந்துகொள்ளுதலை நம்மால் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது. நீங்கள் எப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்தாலும், கர்த்தர் உங்களை முன்குறித்திருந்தால், நிச்சயமாக உங்களைத் தெரிந்துகொண்டு தமது பணிக்காகப் பயன்படுத்துவார்.



ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்த ஒரு இளம் மேய்ப்பனைத் தெரிந்துகொண்டு, அவனை ஒரு தேசத்தின் ராஜாவாக உயர்த்துவதற்கு கர்த்தரால் முடியும். தாய் தகப்பனில்லாத ஒரு ஏழைப் பெண்ணைத் தெரிந்துகொண்டு, ஒரு தேசத்தை ஆளுகிற ராணியாக உயர்த்துவதற்கும் அவர் வல்லமையுள்ள தேவனாக இருக்கிறார். அவருடைய தெரிந்துகொள்ளுதல் மனித சிந்தனைக்கு எட்டாதது.

இயேசு பாவிகள்மேல் கிருபையாயிருக்கிற தேவன். நீங்கள் யாராக இருந்தாலும் சரி; இதுவரை இயேசுவை நம்பாதவர்களாக இருந்தாலும் சரி; அவரை வெறுத்தவர்களாக இருந்தாலும் சரி; இயேசு உங்களைத் தெரிந்து கொண்டிருக்கிறார்.

அவருடைய தெரிந்துகொள்ளுதலுக்கு உங்களை ஒப்புக்கொடுக்கும்போது, இயேசு உங்களையும் வல்லமையாகப் பயன்படுத்துவார்.

உடன்படிக்கையின் தேவன் நோவாவைத் தெரிந்துகொண்டபோது, அவரோடு ஒரு உடன்படிக்கை பண்ணினார் (ஆதியாகமம் 9:8–13). ஆபிரகாமைத் தெரிந்துகொண்டபோதும், அவரோடு உடன்படிக்கை செய்தார் (ஆதியாகமம் 12:1–3). கர்த்தர் யாரைத் தெரிந்துகொள்கிறாரோ, அவர்களோடு உடன்படிக்கை பண்ணுகிறார்; அவர்களுக்குக் கட்டளைகளையும் வாக்குத்தத்தங்களையும் அளிக்கிறார். அதேபோல், கர்த்தர் உங்களை அழைக்கும்போது, உங்களுக்கும் வாக்குத்தத்தங்களைத் தருவார்; உங்களோடும் உடன்படிக்கை செய்வார்.

**அன்பான வாலிபர்களே,** தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை ஆசீர்வதிக்கிற தேவன், எல்லாவிதத்திலும் உங்களை ஆசீர்வதிப்பார். **“ஆண்டவரே, நீர் என்னைத் தெரிந்துகொண்டபடியினால், என்னைப் பரிபூரணமாக ஆசீர்வதியும்”** என்று ஜெபியுங்கள். நிச்சயமாக கர்த்தர் உங்களைப் பரிபூரணமாக ஆசீர்வதிப்பார்!

முகப்பு செய்தி: சதீஷ்




# கற்றுக்கொள்

இன்றைய நவீன உலகில் வாலிபர்கள் மிகுந்த திறமையும் ஆற்றலும் கொண்டவர்களாக இருந்தாலும், அவற்றைச் சரியான பாதையில் பயன்படுத்துவதற்கு ஆலோசனையைக் கேட்கும் மனப்பக்குவம் இருந்தால் போதும், வாழ்க்கையில் வெற்றி பெற முடியும். நாம் எவ்வளவு கற்றிருந்தாலும், ஒவ்வொரு காலகட்டத்திலும் கற்றுக்கொள்ள வேண்டியவை ஏராளம். ஆலோசனையைக் கேட்பது பலவீனம் அல்ல; அது ஒரு பலம். அது தாழ்மையின் அடையாளம். தாழ்மையான மனதுடன் நல்ல ஆலோசனையை ஏற்றுக்கொள்பவர்கள் எதிர்காலத்தில் சிறந்த தலைவர்களாக உருவாகிறார்கள். ஒரு சிறிய ஆலோசனைக்கூட நம்மைப் பெரிய ஆபத்திலிருந்து காப்பாற்றும்.

சாலமோன் ராஜாவின் மகனான ரெகொபெயாம், 41-வது வயதில் ராஜ்யபாரத்தை ஏற்றபோது, மக்கள் அவனிடம் ஒரு விண்ணப்பத்தை வைத்தார்கள். **"உம்முடைய தகப்பன் பாரமான நுகத்தை எங்கள்மேல் வைத்தார். இப்போதும் நீர் உம்முடைய தகப்பன் சுமத்தின கடினமான வேலையையும், அவர் எங்கள்மேல் வைத்த பாரமான நுகத்தையும் இலகுவாக்கும்"** (1 இராஜா. 12:4) என்று வேண்டிக்கொண்டார்கள்.

ரெகொபெயாம் இரண்டு விதமான ஆலோசனைகளைக் கேட்டான். முதலில், தன் தகப்பனின் காலத்தில் பணியாற்றிய அனுபவமிக்க மூப்பர்களிடமும், இரண்டாவது, தன்னோடு வளர்ந்த அனுபவமற்ற நண்பர்களிடமும் ஆலோசனை கேட்டான். இறுதியில், மூப்பர்களின் நல்ல ஆலோசனையைப் புறக்கணித்து, தன் வாலிப நண்பர்கள் கூறிய ஆலோசனையின்படி, ஜனங்களிடம் கடினமாகவும் அகந்தையுடனும் பேசினான். இதன் விளைவாக; ராஜ்யம் வடக்கு-இஸ்ரவேலின் பத்து கோத்திரங்களாகவும், தெற்கு-யூதாவின் இரண்டு கோத்திரங்களாகவும் பிரிந்தது.

ரெகொபெயாம் தவறான ஆலோசனைக்குச் செவிகொடுத்ததால் யூதா பலவீனமடைந்தது. உங்கள் வயதுடைய நண்பர்கள் உங்கள் உணர்வுகளைப் புரிந்துகொள்ளலாம்; ஆனால் வாழ்க்கை அனுபவம் உள்ளவர்களின் ஆலோசனையே, தவறான பாதையில் செல்லாமல் காக்கும் சரியான வழிகாட்டியாக இருக்கும். எனவே, ரெகொபெயாமைப் போல மூப்பர்களின்




கண்டிப்பையும் ஆலோசனையையும் புறக்கணிக்காமல், பணிவுடன் ஏற்றுக்கொள்வதே புத்திசாலித்தனம்.

நம் வாழ்க்கையில் எடுக்கும் ஒவ்வொரு முடிவும் சரியானதாக இருக்க வேண்டும். அதற்கு அனுபவம் உள்ளவர்களின் நல்ல ஆலோசனை மிகவும் அவசியம். நல்ல ஆலோசனைகளைக் கேட்டு நடக்கும்போது பல தவறுகளிலிருந்தும் பிரச்சனைகளிலிருந்தும் தப்பித்துக்கொள்ளலாம். **“நல்யோசனை உன்னைக் காப்பாற்றும்; புத்தி உன்னைப் பாதுகாக்கும்”** (நீதி. 2:11).

தீமோத்தேயு இளம் வயதில், பவுல் கொடுத்த நல்ல ஆலோசனைகளையும் கண்டிப்புகளையும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டார். அதன் விளைவாக, தவறான உபதேசங்களிலிருந்தும் வாலிப இச்சைகளிலிருந்தும் தன்னைக் காத்துக்கொண்டு, விசுவாசிகளுக்கு முன்மாதிரியான வாலிபனாகத் திகழ்ந்தார். **“கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டைபண்ணுகிறவனாயிராமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதகசமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்க வேண்டும்”** (2 தீமோ. 2:24) என்ற பவுலின் அறிவுரையின்படி வாழ்ந்தார்.




தன் வாலிபப் பருவத்தில் பவுலின் ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டதன் காரணமாக, பின்னாளில் தீமோத்தேயு சபையை வழிநடத்தும் ஞானமிக்க தலைவராக உயர்த்தப்பட்டார். இயல்பிலேயே பயந்த சுபாவம் கொண்டிருந்த அவருக்கு, எபேசு சபையை வழிநடத்தும் பொறுப்பு வந்தபோது, பல சவால்களும் எதிர்ப்புகளும் ஏற்பட்டன. ஆனால் பவுல் வழங்கிய ஆலோசனைகள் அவருக்குத் தைரியத்தை அளித்தன. அதன் மூலம் அவர் பின்வாங்காமல் விசுவாசிகளை சரியான வழியில் வழிநடத்தினார். மேலும், சபைக்குள் தவறான போதனைகள் புகாதபடி காத்து, சத்தியத்தைத் தைரியமாகப் பிரசங்கித்த உண்மையுள்ள ஊழியனாக நிலைத்தார்.

**எனக்கன்பான வாலிபர்களே,**

**உங்கள் வாலிபத்தின் வேகத்தோடு அனுபவமிக்கவர்களின் விவேகத்தையும், தேவனுடைய ஆலோசனையையும் இணைத்துக்கொள்ளுங்கள். அது ஆபத்தான சூழ்நிலைகளிலிருந்து உங்களைக் காத்து, நல்ல எதிர்காலத்தை நோக்கி வழிநடத்தும். இளம் வயதில் நீங்கள் வெளிப்படுத்தும் தாழ்மையும், நல்ல ஆலோசனைகளைக் கேட்டு நடக்கும் மனப்பக்குவமுமே, உங்களை நாளைய சிறந்த தலைவராக உருவாக்கும்.**

சாதனை சுமா கிரேஷன்






# கனவை வென்ற மனிதன்!

**அன்பான இளம் சாதனையாளர்களுக்கு, என்னுடைய அன்பின் வாழ்த்துக்கள்! இந்த உலகில் நாம் வெற்றிபெற வசதி, பணம் அல்லது உடல் வலிமை மட்டும் போதாது. நிரந்தரமான வெற்றியை உருவாக்குவது தன்னம்பிக்கை, விடாமுயற்சி மற்றும் இலக்கின் மீது நாம் கொண்ட உறுதியான நம்பிக்கையாகும். இதற்கு மிகச் சிறந்த சாதனையாளராக இருப்பவர் அப்துல்லா அஃப்ரீத் (Abdullah Afridh).**

அப்துல்லா அஃப்ரீத்தின் வெற்றிப் பயணம் எளிதானதாக இல்லை. அவர் சிறுவயதிலிருந்தே செரிப்ரல் பால்சி (Cerebral Palsy) என்ற நரம்பியல் குறைபாட்டுடன் வளர்ந்தார். இந்தக் குறைபாட்டால் உடலின் தசை இயக்கம், கை, கால்களின் ஒருங்கிணைப்பு ஆகியவை பாதிக்கப்பட்டன. மற்றவர்கள் எளிதாகச் செய்யும் பல செயல்களை அவர் மிகப் பொறுமையுடன் செய்ய வேண்டியிருந்தது. அதுமட்டுமல்லாமல், அவருக்குப் பார்வை குறைபாடும் (Low vision / visual Impairment) இருந்தது. புத்தகங்களைப் படிப்பது, குறிப்புகளைத் தயாரிப்பது மற்றும் நீண்ட நேரம் படிப்பது போன்றவை சவாலானதாக இருந்தன.




ஆனால், இந்த உடல் சவால்கள் எதுவும் அவருடைய குறிக்கோளை உடைக்கவில்லை. தனது உடல்நிலையை அவர் ஒருபோதும் பலவீனமாகக் கருதவில்லை. மாறாக, அது இன்னும் அதிகமாக உழைக்க வேண்டும் என்ற உறுதியை அவருக்கு அளித்தது. அந்த உறுதியுடன் UPSC போட்டித் தேர்வுக்காக கடினமாக உழைத்து அதில் பங்கேற்றார். இந்தத் தேர்வில் ஆயிரக்கணக்கானோர் தேர்வு எழுதினாலும், மிகச் சிலரே வெற்றி பெறுகின்றனர். இப்படிப்பட்ட கடினமான தேர்வில், பல சவால்களை எதிர்கொண்ட அப்துல்லா, தனது முதல் முயற்சியிலேயே அலை இந்திய தரவரிசை (AIR) 942 பெற்று வெற்றி பெற்றார்.

**இதை வாசிக்கும் வாலிபர்களே, அப்துல்லாவின் வாழ்க்கை நமக்கு முக்கியமான பாடத்தைக் கற்பிக்கிறது. சூழ்நிலைகள் உங்கள் எதிர்காலத்தை முடிவு செய்யாது. உங்கள் முடிவுகள்தான் உங்கள் எதிர்காலத்தை உருவாக்கும். கனவு காணுங்கள்! அந்தக் கனவுக்காக உழையுங்கள்! தடைகளைப் பார்த்துப் பயப்படாதீர்கள்! உங்கள் முயற்சியை ஒருநாள் உலகமே பாராட்டும் சாதனையாக மாறும்!**

# வாலிபர் எழுப்புதல் கூடுகை

## நாகர்கோவிலில்

நாள்: **20 செப்டம்பர் 2026**
(ஞாயிற்று கிழமை)

இடம்: ஆனந்தம் மினி ஹால்,
கலெக்டரேட் அருகில்,
சிதம்பரநாதன் தெரு, நாகர்கோவில்

நேரம்:
**3:00 PM - 6:00 PM**

தொடர்புக்கு: 97509 55548, 84286 36128

## கரூரில்

நாள்: **19 செப்டம்பர் 2026**
(சனிக்கிழமை)

இடம்: துதி மண்டபம்,
CSI ஹென்றி லிட்டில் ஆலயம்,
கரூர் - 1

நேரம்:
**6:00 PM - 9.30 PM**

தொடர்புக்கு: 7904866479, 9489775075



செய்தியும் ஜெபமும்: **சகோ. அவினாஷ்**

## மஹாராஷ்டிரா மாநிலம் - நாக்பூரில்...

நாள்: **10 அக்டோபர் 2026** (சனிக்கிழமை)
நேரம்: **5:00 PM - 9.00 PM**

இடம்: நாக்பூர், மகாராஷ்டிரா

தொடர்புக்கு: 99231 80390 | 90048 82470



செய்தியும் ஜெபமும்: **சகோ. சாம் ஜெயராஜ்**

## REVIVAL IGNITERS - LIVE -

**செப்டம்பர் 27**
(ஞாயிற்றுக்கிழமை)

ஒவ்வொரு மாதமும் திறப்பின் வாசலுக்கு (கடைசி சனி) அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணி முதல் 5.30 மணி வரை, இயேசு விடுவிக்கிறார் சமூக வலைத்தளங்கள் {YouTube (Jesus Redeems Official & Youth Trendz) மற்றும் Facebook} வழியாக நேரலையில் பார்க்கலாம்..






இந்த நிகழ்ச்சியை உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். அவர்களையும் இணைத்து, ஆவிக்குரிய புதுப்பொலிவை அனுபவிக்கச் செய்யுங்கள்.

ஆலோசனை: அவி

# தோல்வி அல்ல... புதிய தொடக்கம்!




நான் கல்லூரி முதலாம் ஆண்டு படித்து வருகிறேன். பள்ளியில் படித்தபோது வகுப்பில் எப்போதும் முதல் மதிப்பெண் பெற்று, முதல் மாணவியாக இருந்தேன். தற்போது கல்லூரியில் முதல் குரூப் எடுத்து நன்றாகப் படித்து வருகிறேன். எங்கள் வீட்டில் பொருளாதார வசதி குறைவு. அதனால் மற்ற மாணவிகளைவிட என்னுடைய dress மிகவும் எளிமையாக இருக்கும். ஆனால் என்னுடன் படிக்கும் நண்பர்கள் அனைவரும் வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் பெரும்பாலும் carல்தான் கல்லூரிக்கு வருகிறார்கள். ஆனால் நான் சாதாரண உடை அணிந்து, பேருந்தில் பயணம் செய்து வருகிறேன்.

இதனால் என் ஆசிரியர் என்னை எப்போதும் மட்டுப்படுத்துவதும், அனைவருக்கும் முன்பாக அவமானப்படுத்தும் விதமாக நடந்துகொள்வதும் எனக்கு மிகவும் வேதனையாக இருக்கிறது. இதன் காரணமாக படிப்பிலும் கவனம் செலுத்த முடியவில்லை. என்னை வெறுத்து ஒதுக்கும் அந்த ஆசிரியர், அவருடைய பாடத்தில் என்னை fail செய்துவிட்டார்.

இதனால் ஒருபுறம் சோர்வும், மறுபுறம் வேதனையும் என்னை வாட்டுகிறது. அதனால் கல்லூரிக்குச் செல்வதையே நிறுத்திவிட்டேன். எங்கள் குடிசை வீட்டை ஒரு மாடி வீடாக மாற்ற வேண்டும். ஒருமுறையாவது என் அப்பாவையும் அம்மாவையும் Aeroplaneல் அழைத்துச் செல்ல வேண்டும் என்பதுதான் என்னுடைய கனவு. ஆனால் என் ஆசிரியரின் இந்த அணுகுமுறை என் கனவுகள் அனைத்திலும் மண்ணை அள்ளிப் போட்டது போல இருக்கிறது. நான் என்ன செய்வது? – சுபி, கரூர்.

அன்பு சகோதரி சுபி,

உங்களுடைய கடிதத்தின் மூலம் உங்கள் மன உளைச்சலையும் வேதனையையும் நன்றாகப் புரிந்துகொள்ள முடிகிறது. சில ஆசிரியர்களின் கவனக்குறைவான அணுகுமுறையால் திறமையான பல மாணவர்கள் மனரீதியாகப் பாதிக்கப்படுகிறார்கள்.

சுபி, உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் அவமானத்தையும் புறக்கணிப்பையும் என்னால் உணர முடிகிறது. இந்த வேதனையான சூழ்நிலையைக் கையாள நீங்கள் இரண்டு வழிகளில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுக்கலாம்.

ஒன்று, மனவேதனையில் முடங்கிப் போவது;

மற்றொன்று, அதிலிருந்து மீண்டு முன்னேறுவது.

இப்போது உங்கள்முன் இரண்டு options இருக்கின்றன.

**Option – 1**

ஆசிரியரின் காயப்படுத்தும் வார்த்தைகளால் மனம் உடைந்து, "இந்தப் படிப்பால் எனக்கு வேதனையும் அவமானமும் மட்டுமே கிடைக்கிறது" என்று நினைத்து வீட்டிலேயே இருந்து விடலாம்.



**Option - 2**

**இந்தத் தற்காலிக தடைகளையும் காயப்படுத்தும் வார்த்தைகளையும், நீங்கள் முன்னேறிச் செல்லும் படிக்கற்களாக மாற்றிக்கொண்டு, படிப்பில் சிறந்து விளங்கி, மேலும் உங்கள் கனவான மாடி வீட்டைக் கட்டி, உங்கள் பெற்றோரை விமானத்தில் அழைத்துச் செல்லும் இலக்கையும் நிச்சயமாக நிறைவேற்றலாம்.**

## முதல் Optionஐ தொடர்ந்தால்...

கல்லூரிக்குச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்ற எண்ணம் தற்காலிகமாக மனஅமைதியைத் தரலாம். ஒரு பிரச்சனைக்கு உடனடியாகத் தீர்வு கண்டுவிட்டோம் என்று தோன்றலாம்.

ஆனால் கல்வி என்பது வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாத ஒன்று. அதை அலட்சியப்படுத்தினால், அது எதிர்காலத்தில் உங்கள் வாழ்க்கைக்கே கேள்விக்குறியாக மாறிவிடும்.

''கல்லூரிக்குச் சென்று அவமானப்படுவதைவிட வீட்டிலேயே இருந்துவிடலாம்'' என்ற முடிவு, தற்காலிகமாக பிரச்சினையைத் தவிர்க்க உதவலாம். ஆனால் அது நிரந்தரமான தீர்வாக இருக்காது.

## இரண்டாவது Optionஐ எடுத்தால்...

உங்களைப் புறக்கணிக்கும் ஆசிரியரிடம் அமைதியாகவும் பணிவாகவும் பேச ஒரு வாய்ப்பு கிடைத்தால், உங்கள் மனவேதனையை மரியாதையுடன் எடுத்துரைத்துப் பாருங்கள். அவர் உங்களைப் புரிந்துகொள்ள வாய்ப்பு உண்டு.

எந்த ஆசிரியர் உங்களை fail செய்தாரோ, அந்தப் பாடத்திலேயே இன்னும் அதிக கவனம் செலுத்திப் படியுங்கள். உங்கள் கடின உழைப்பு நல்ல மதிப்பெண்களை பெறும்போது, உங்களைக் குறித்த நல்ல எண்ணத்தையும் கொடுக்கும்.

ஆசிரியர் என்பவர் நாம் உயர்ந்து செல்ல உதவும் ஏணி போன்றவர். சில நேரங்களில் அந்த ஏணியே தடையாக இருப்பது வேதனை அளிக்கலாம். ஆனால் அந்தத் தடைகளைப் படிக்கற்களாக மாற்றுவது உங்கள் கையில்தான் இருக்கிறது. அவர்கள் எதிர்பார்த்ததைவிட, அந்தப் பாடத்தில் கவனம் செலுத்தினால், நிச்சயமாக அதிக மதிப்பெண்கள் எடுக்க முடியும்.



மேலும், உங்கள் இரண்டு கனவுகளுமான மாடி வீட்டைக் கட்டுவதும், உங்கள் பெற்றோரை விமானத்தில் அழைத்துச் செல்வதும் நிறைவேற வேண்டுமென்றால், கல்வி மிகவும் அவசியம். தேவைப்படும் இடங்களில் நண்பர்களின் உதவியைப் பெற்று, உங்களால் மாற்றக்கூடிய விஷயங்களை மாற்ற முயற்சி செய்யுங்கள். காலப்போக்கில் அந்த ஆசிரியரின் அணுகுமுறையும் மாற வாய்ப்பு இருக்கிறது.

சுபி, வாழ்க்கையில் எதிர்நீச்சல் போடுவது எளிதல்ல. ஆனால் உறுதியுடன் முடிவு செய்துவிட்டால், நாம் அடைய வேண்டிய இலக்கை நோக்கி தொடர்ந்து பயணிக்க முடியும்.

சில நேரங்களில், ''யாராவது வந்து நமக்கு ஆறுதல் சொல்லுவார்கள், உற்சாகப்படுத்துவார்கள்'' என்று காத்திருப்போம். ஆனால் வாழ்க்கையில் பல நேரங்களில், நாமே எழுந்து நம்மை நாமே உற்சாகப்படுத்திக் கொண்டு முன்னேற வேண்டும்.

சுபி, நீங்கள் இன்று எடுக்கும் அந்த தீர்மானமே, உங்கள் வாழ்க்கையில் ஒரு புதிய தொடக்கமாக அமையும். அதுமட்டுமல்ல, உங்களைப் போன்ற பல பெண்களுக்கு நீங்கள் ஒரு சிறந்த முன்மாதிரியாகவும் இருப்பீர்கள். இன்று இந்த ஜெபத்தைச் செய்யுங்கள்:

**“தேவனே, என்னை ஆசீர்வதித்து என் எல்லைகளை விரிவாக்கும். உம்முடைய கரம் என்னோடு இருந்து, எந்தத் தீங்கும், தோல்வியும், துக்கமும் என்னை அணுகாதபடி என்னைக் காத்தருளும்.”**

இயேசு கிறிஸ்து உங்களுக்கு பெலனையும், ஞானத்தையும், வெற்றியையும் அருளுவாராக!

**All The Best!**



# Warrior And Mighty Generation Camp



கடந்த மே மாதம் 16 மற்றும் 17 ஆகிய தேதிகளில், **Warrior Generation** மற்றும் **Mighty Generation** ஆக தெரிந்தெடுக்கப்பட்ட வாலிபர்களுக்கென்று பிரத்யேகமாக இரண்டு நாள் முகாம் நடைபெற்றது. இதில் 300-க்கும் மேற்பட்ட வாலிபர்கள் உற்சாகத்துடன் கலந்துகொண்டனர்.





இந்த முகாமில், சகோதரர் **மோகன் சி. லாசரஸ்** மற்றும் சகோதரர் **சாம் ஜெபராஜ்** அவர்களைத் தேவன் வல்லமையாகப் பயன்படுத்தினார். தேவன் ஏற்கெனவே அளித்திருந்த யுத்த அபிஷேகத்தை மேலும் அளவில்லாமல் ஊற்றி, வல்லமை வரங்களினால் தமது பிள்ளைகளை நிரப்பினார். மேலும், தேசத்தின் அரண்களை முறிக்கும் ஆவிக்குரிய வல்லமையைப் பெற்று, இனிவரும் நாட்களில் தேவனுக்காக அதிக வைராக்கியத்துடனும் அர்ப்பணிப்புடனும் செயல்படுவோம் என்று தீர்மானத்துடன் கடந்து சென்றார்கள்.




# தேவனுக்கே மகிமை!

சிந்திக்க : ரூத்

# கிறிஸ்துவின் போதனைகள் மெய்யான சந்தோஷத்

(போதகராகிய இயேசுவும் இந்

ஒவ்வொரு படியிலும் கடைப்பிடிக்க வேண
"மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை

## நம் முன்மாதிரி

"நான் சாந்தமும் மனத்தாழ்மையுமுள்ளவனாயிருக்கிறேன்; என் நுகத்தை

### 1. ஆவியில் எளிமையுள்ளவர்களுக்கு மகிழ்ச்சி




வேதாகம எடுத்துக்காட்டு:
(லூக்கா 18:13 – ஆயக்காரன்)

தனது ஆத்தும வறுமையை உணர்ந்து, தேவனுடைய கிருபையை முழுமையாகச் சார்ந்திருந்ததால், பரலோகப் பாக்கியத்தைப் பெற்று மகிழ்ச்சியோடு சென்றான்.

இயேசுவின் முன்மாதிரி: பிலிப்பியர் 2:7

பரிசு: பரலோகக் குடியுரிமை

### 2. துயரப்படுகிறவர்களு



வேதாகம எடு
(மத்தேயு 26:7

செய்த தவறை
துக்கம் அடை
ஆறுதலைப்
கிறிஸ்துவின்
இயேசுவின் மு

பரிசு: தேவனுடை

### 6. இருதயத்தில் சுத்தமுள்ளவர்களுக்கு மகிழ்ச்சி



வேதாகம எடுத்துக்காட்டு:
(யோவான் 1:47 – நாத்தான்வேல்)
மறைவான நோக்கங்களையும் வஞ்சகத்தையும் அகற்றி, நேர்மையுடனும் உத்தம இருதயத்துடனும் வாழ்ந்ததால், ஆண்டவரை அறிந்து மகிழ்ச்சியோடு அவரைப் பின்பற்றினார்.
இயேசுவின் முன்மாதிரி: மத்தேயு 4:10

பரிசு: தேவனை அறியும் பாக்கியம்

### 5. இரக்கமுள்ளவர்களு



வேதாக
(லூக்கா

தான் தே
மனதுரு
மற்றவர்
மேலும்
இரக்கம்
இயேசு

பரிசு: தேவனுடை

### 7. சமாதானம் பண்ணுகிறவர்களுக்கு மகிழ்ச்சி



வேதாகம எடுத்துக்காட்டு:
(அப்போஸ்தலர் 4:36; 9:26–27 – பர்னபாஸ்)
முறிந்த, பிரிந்த, சோர்வுற்ற உறவுகளுக்கிடையே தேவனுடைய சமாதானத்தைக் கொண்டுவந்ததால், மகிழ்ச்சியோடு பிரதான ஊழியத்தில் பங்காற்றினார்.
இயேசுவின் முன்மாதிரி: ஏசாயா 53:4–5; எபேசியர் 2:14

பரிசு: தேவனுடைய பிள்ளைகள் என்ற பாக்கியம்



பரிசு:

# ததை அடைய ஒரு ஆவிக்குரிய பயணம்

ருப் பாதையில்தான் நடந்தார்.)



## ண்டிய பொன்னான விதிமுறை

ளையே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்." (மத்தேயு 7:12)

த உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்." (மத்தேயு 11:29)

### க்கு மகிழ்ச்சி

த்துக்காட்டு:
75 – பேதுரு)

உணர்ந்து, தேவனுக்கேற்ற
ந்ததால், தேவனுடைய
பெற்று, மகிழ்ச்சியோடு
பாதையில் நடந்தார்.
முன்மாதிரி: லூக்கா 19:41

ய ஆறுதல்

### 3. சாந்தகுணமுள்ளவர்களுக்கு மகிழ்ச்சி



வேதாகம எடுத்துக்காட்டு:
(லூக்கா 1:38 – நாசரேத்தூர் மரியாள்)

தேவனுடைய காலத்தையும் நோக்கத்தையும் நம்பி, கன்னியாக இருந்தும் தேவனுடைய சித்தத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொண்டதால், பின்னர் தேவனுடைய மகிழ்ச்சியை அனுபவித்தார்.
இயேசுவின் முன்மாதிரி: 1 பேதுரு 2:23

பரிசு: சுதந்தரப் பாக்கியம்


### க்கு மகிழ்ச்சி

ம எடுத்துக்காட்டு:
10 – நல்ல சமாரியன்)

தவனிடத்தில் அனுபவித்த கிருபை,
க்கம், அனுதாபம் மற்றும் அன்பை
களிடமும் வெளிப்படுத்தியதால்,
இரக்கம் செய்ய தேவனிடத்தில்
பெற்றான்.
வின் முன்மாதிரி: யோவான் 8:1–11

டய முழு இரக்கம்

### 4. நீதியின்மேல் பசி தாகமுள்ளவர்களுக்கு மகிழ்ச்சி



வேதாகம எடுத்துக்காட்டு:
(யோவான் 4 – சமாரியப் பெண்)

விருப்பத்தோடு ஜீவத் தண்ணீரை நாடியதால், ஆத்தும தாகம் தீர்க்கப்பட்டு, திருப்தியடைந்து, மகிழ்ச்சியோடு நற்செய்தியை அறிவிக்க ஓடினாள்.
இயேசுவின் முன்மாதிரி: மத்தேயு 4:4

பரிசு: ஆத்துமத் திருப்தி

### 8. நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்களுக்கு மகிழ்ச்சி



வேதாகம எடுத்துக்காட்டு:
(அப்போஸ்தலர் 7 – ஸ்தேவான்)
நித்தியப் பரிசு பரலோகத்தில் உண்டு என்பதை அறிந்து, துன்பம், புறக்கணிப்பு, நிந்தனை ஆகிய அனைத்தையும் சகித்துக்கொண்டு, இயேசுவைப் போலவே மகிழ்ச்சியோடு தனது ஓட்டத்தை முடித்தார்.
இயேசுவின் முன்மாதிரி: எபிரெயர் 12:2

இயேசுவோடு நித்திய வாழ்வு

## *நினைவில் கொள்ளுங்கள்...*

**"பயணம் கடினமே... ! ஆனால், இந்த ஆவிக்குரிய திறவுகோல்களோடு முன்செல்வோம்! இயேசுவைப் போல மாறுவோம்; இராஜாதி இராஜாவோடு நித்தியமாய் மகிழ்ந்திருப்போம்!"**

வேத ஆராய்ச்சி : ஜோயல்



# வேதாகம களஞ்சியம்!!

Hello Friends, **இந்த மாதம், வேதாகமத்தில் சங்கீதம் மற்றும் நீதிமொழிகளுக்குப் பிறகு வரிசையாக இடம்பெறும் இலக்கிய வடிவிலான மற்ற இரண்டு புத்தகங்களான பிரசங்கி மற்றும் உன்னதப்பாட்டு புத்தகங்களின் பின்னணியை அறிந்துகொள்வோம்.**

### பிரசங்கி (ஞானப் புத்தகம்):

பொதுவாக, **பிரசங்கி** புத்தகத்தின் ஆசிரியர் என **சாலொமோன் ராஜா** கருதப்படுகிறார். இருப்பினும், இப்புத்தகத்தின் ஆசிரியர் தம்மை **"போதகர்"** (Qoheleth / Preacher) என்று அறிமுகப்படுத்துகிறார்.

இந்தப் புத்தகம் வாழ்க்கையின் உண்மையான அர்த்தத்தை ஆராய்ந்து, ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டிய முக்கியமான சில கேள்விகளை எழுப்புகிறது:

- எது நிலையான மனநிறைவைத் தருகிறது?
- செல்வம் போதுமானதா?
- இன்பம் போதுமானதா?
- ஞானம் போதுமானதா?

### முக்கியக் கருப்பொருள்கள்

- வாழ்க்கையின் நிலையாமை
- மரணத்தின் நிச்சயம்
- செல்வம் மற்றும் இன்பத்தின் எல்லைகள்
- ஞானத்தின் மதிப்பு
- தேவனுடைய ஆசீர்வாதங்களை அனுபவித்தல்
- நித்தியத்தை மனதில் கொண்டு வாழ்தல்

**தேவன் இல்லாத வாழ்க்கை இறுதியில் அர்த்தமற்றதாகிவிடும்** என்பதே இப்புத்தகத்தின் மையச் செய்தியாகும்.

### உன்னதப்பாட்டு (அன்புக் காவியம்)

பொதுவாக, **உன்னதப்பாட்டு** (Song of Songs / Song of Solomon) புத்தகத்தின் ஆசிரியராக **சாலொமோன் ராஜா** கருதப்படுகிறார்.

இந்தப் புத்தகம் ஒரு மணமகனுக்கும் மணமகளுக்கும் இடையிலான தூய்மையான அன்பையும், திருமண உறவின் அழகையும் சித்தரிக்கிறது. தேவன் ஏற்படுத்திய திருமண உறவின் மகத்துவத்தையும், அன்பின் பரிசுத்தத்தையும் இப்புத்தகம் வலியுறுத்துகிறது.

### முக்கியக் கதாபாத்திரங்கள்

- **மணமகன்** – சாலொமோன் ராஜா என்று பலர் கருதுகின்றனர்.
- **மணமகள்** – சூலமித்தியப் பெண் (6:13); தன் தூய்மையான அன்பையும் உண்மையையும் வெளிப்படுத்துகிறாள்.
- **எருசலேமின் குமாரத்திகள் (தோழிகள்)** – காதல் மற்றும் திருமண மகிழ்ச்சியின் சாட்சிகளாக இடம்பெறுகின்றனர்.

### முக்கியக் கருப்பொருள்கள்

- **கணவன்–மனைவி இடையிலான தூய்மையான அன்பு**
- **திருமண உறவின் பரிசுத்தம்**
- **உண்மையான அன்பின் மதிப்பு**
- **அன்பின் வலிமை மற்றும் நிலைத்தன்மை**
- **உறவில் நம்பிக்கை, அர்ப்பணிப்பு மற்றும் நெருக்கம்**

### ஆவிக்குரிய விளக்கம்

யூத பாரம்பரியத்தில், இப்புத்தகம் **தேவனுக்கும் இஸ்ரவேல் ஜனங்களுக்கும்** இடையிலான அன்பின் அடையாளமாகக் கருதப்படுகிறது.

கிறிஸ்தவ விளக்கத்தின்படி, இது **கிறிஸ்துவுக்கும் சபைக்கும்** இடையிலான ஆழமான அன்பையும் நெருக்கமான உறவையும் குறிக்கும் உருவகமாகப் பார்க்கப்படுகிறது.

### முக்கியச் செய்தி

உண்மையான அன்பு தேவனால் கொடுக்கப்பட்ட பரிசாகும். அது வெறும் உணர்ச்சி மட்டுமல்ல; அர்ப்பணிப்பு, விசுவாசம் மற்றும் பரிசுத்தமான உறவை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கை முறையாகும்.

## நினைவிற்கு:

பிரசங்கி புத்தகம், வாழ்க்கையின் உண்மையான அர்த்தத்தை ஆராய்ந்து, செல்வம், இன்பம், ஞானம் போன்ற உலகக் காரியங்கள் - தேவன் இல்லாமல் நிலையான திருப்தியைத் தர முடியாது என்பதை வலியுறுத்துகிறது.

உன்னதப்பாட்டு புத்தகம், தேவன் கொடுத்த தூய்மையான அன்பின் அழகையும், திருமண உறவின் பரிசுத்தம், அர்ப்பணிப்பு மற்றும் விசுவாசத்தின் மதிப்பையும் எடுத்துக்காட்டுகிறது.

இந்த இரண்டு புத்தகங்களும், மனித வாழ்க்கையின் உண்மையான நிறைவு தேவனை மையமாகக் கொண்டு வாழ்வதில் மட்டுமே உள்ளது என்பதை தெளிவாக உணர்த்துகின்றன.

இந்தத் தொடர் உங்களுக்குப் பயனுள்ளதாக இருந்திருக்கும் என்று நம்புகிறோம்.

கடந்த 7 மாதங்களாக, பழைய ஏற்பாட்டிலுள்ள 22 புத்தகங்களின் பின்னணியை அறிந்துகொண்டோம்.

ஒருவேளை இதுவரை நீங்கள் வேதாகமத்தை வாசிக்கத் தொடங்கவில்லை என்றால், இன்றே தொடங்குங்கள்!

தேவன் நிச்சயமாக உங்களுக்கு உதவி செய்வார்.

நிகழ்வு: ஜெனிபர்

# அழுத்தத்தின் கீழ்...



*Hi Friends, எல்லாரும் எப்படி இருக்குறீங்க? இந்த மாதமும் மீண்டும் உங்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இந்தத் தொடர் உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புகிறேன்.*

*இந்த மாதம், அதிக அழுத்தமான சூழ்நிலையின் கீழ் "வைரம்" எப்படி உருவாகிறது என்பதைப்பற்றிப் பார்க்கப் போகிறோம். வாங்க, தொடருக்குள் செல்லலாம்...*

*வைரம் என்பது தூய கார்பன் (Carbon) அணுக்களால் உருவாகும் இயற்கை கனிமமாகும். இது பூமியின் ஆழத்தில் (சுமார் 150–200 கி.மீ. ஆழத்தில்), மிக அதிக வெப்பமும் அழுத்தமும் (900–1,300°C வெப்பநிலை; 45,000–60,000 மடங்கு அழுத்தம்) நிலவும் இடங்களில் உருவாகிறது. இந்த அதிக வெப்பமும் அழுத்தமும் கார்பன் அணுக்களை மிகவும் வலிமையான படிக (Crystal) அமைப்பாக மாற்றுகின்றன.*

## வைரம் பிரித்தெடுக்கப்படும் முறைகள்

### 1. திறந்த சுரங்க முறை (Open-pit Mining)



வைரம் தரைக்கு அருகில் இருந்தால், பெரிய இயந்திரங்கள் மற்றும் வெடிமருந்துகளைப் பயன்படுத்தி மேலுள்ள பாறைகளை அகற்றி வைரத்தைப் பிரித்தெடுப்பார்கள்.

### 2. நிலத்தடி சுரங்க முறை (Underground Mining)



வைரம் மிகவும் ஆழத்தில் இருந்தால், சுரங்கப் பாதைகள் **(Tunnel)** அமைத்து ஆழத்திலிருந்து பிரித்தெடுப்பார்கள்.

### 3. ஆற்று / கடற்கரை சுரங்க முறை (Alluvial Mining)



ஆறுகள் மற்றும் கடற்கரைகளில் மணலுடன் கலந்திருக்கும் வைரங்கள் இந்த முறையில் பிரித்தெடுக்கப்படுகின்றன.

# வைரம் சுத்திகரிக்கப்படும் நிலைகள்



### I. நசுக்குதல் (Crushing)

வைரத்தை உள்ளடக்கிய பெரிய பாறைகள் இயந்திரங்களின் உதவியால் நசுக்கப்படுகின்றன.

### 2. சலித்தல் (Screening)

அதன்பின், சல்லடைகள் மூலம் அவை அளவின்படி பிரிக்கப்படுகின்றன.

### 3. அடர்த்தி மற்றும் ஒளிக்கதிர் தொழில்நுட்பம் (Density Separation & X-ray/Laser Technology)

வைரம் அதிக அடர்த்தி கொண்டது என்பதால், மற்ற கற்களிலிருந்து அதை எளிதாகப் பிரிக்க முடிகிறது. மேலும், வைரம் ஒளியை தனித்துவமாகப் பிரதிபலிப்பதால் **X-ray** மற்றும் **Laser Technology** மூலம் இயந்திரங்கள் அவற்றைத் துல்லியமாகக் கண்டறிகின்றன.

### 4. வெட்டுதல் மற்றும் மெருகூட்டுதல் (Cutting & Polishing)

இயற்கையாகச் சுரங்கத்தில் கிடைக்கும் வைரம் ஆரம்பத்தில் அழகாக ஒளிராது. அது ஒரு சாதாரண கல்லைப் போலவே தோன்றும். அதன் உண்மையான அழகை வெளிக்கொணர, நிபுணர்கள் வைரத் துகள்கள் பூசப்பட்ட சிறப்பு அரிவாள்களைக் கொண்டு மிகுந்த கவனத்துடன் அதை வெட்டுகிறார்கள். ஒவ்வொரு வெட்டும் மிகத் துல்லியமாகச் செய்யப்படுகிறது. ஏனெனில், ஒரு தவறான வெட்டு வைரத்தின் மதிப்பைக் குறைத்துவிடும்.

வெட்டப்பட்ட பிறகும் வைரம் முழுமையாக ஒளிராது. அதை **Polishing Wheel**-இல் வைத்து, வைரத் துகள்களின் உதவியுடன் மிக நுணுக்கமாக மெருகூட்டுகிறார்கள். அப்போதுதான் அது ஒளியை மிக அழகாகப் பிரதிபலிக்கிறது.

### 5. தரப்படுத்துதல் (Grading)

பிரித்தெடுக்கப்பட்ட வைரங்கள் அவற்றின் எடை, வெட்டுத் தரம், நிறம் மற்றும் உள்ளகத் தூய்மை ஆகியவற்றின் அடிப்படையில் தரப்படுத்தப்படுகின்றன.

**“நான் உன்னை உலைக்கலத்தில் சுத்திகரிப்பதுபோல சுத்திகரித்தேன்”** (ஏசாயா 48:10).

இந்த வசனத்தைப் போலவே, வைரமும் ஆரம்பத்திலிருந்தே அழகாகவும் ஒளிர்வதாகவும் இருக்கவில்லை. அதன் சுத்திகரிப்பும் மெருகூட்டுதலுமே அதை ஒளிர்வதாகவும் மதிப்புமிக்கதாகவும் மாற்றுகின்றன.

ஒரு வைரம் பூமியில் எவ்வளவு ஆழத்தில் இருக்கிறதோ, அதைப் பிரித்தெடுக்கும் முறையும் அதற்கேற்ப தீர்மானிக்கப்படுகிறது. அதுபோல, நமக்கும் தேவனுக்கும் உள்ள உறவின் ஆழத்தையும், அவர் நம்மை உருவாக்க விரும்பும் நோக்கத்தையும் பொறுத்தே, நம்மைச் சுத்திகரிக்கும் முறைகளும் மாறுபடுகின்றன.

வைரம் உருவாக அதிக வெப்பமும் அழுத்தமும் அவசியம். அதேபோல், நம் வாழ்க்கையில் வரும் சோதனைகள், கஷ்டங்கள், இழப்புகள் ஆகியவை, நாம் தேவனுக்கேற்ற வைரங்களாக உருவாகுவதற்கான அவசியமான செயல்முறைகளாகும்.

ஆனால், வைரத்தைச் சுற்றியுள்ள பாறைகள் உடைக்கப்படாமல் அதை வெளிக்கொணர முடியாததுபோல, நம்மிலுள்ள மாம்ச சுபாவம் உடைக்கப்படும்போதுதான் கிறிஸ்துவின் சாயல் நம்மில் வெளிப்பட ஆரம்பிக்கும்.

வைரம் வெட்டப்பட்டு மெருகூட்டப்பட்ட பிறகே அதிக ஒளியைப் பிரதிபலிக்கிறது. அதுபோல, நாமும் கிறிஸ்துவின் ஒளியை உலகிற்கு பிரதிபலிக்க, சில நேரங்களில் வலிமிகுந்த சோதனைகளையும் வேதனையான சூழ்நிலைகளையும் கடந்து செல்ல வேண்டியிருக்கும்.

ஒரு வைரம் உருவாக நீண்ட காலமும், அதிக வெப்பமும், கடுமையான அழுத்தமும் தேவைப்படுகிறது. அதைப் போலவே, தேவன் நம் வாழ்க்கையில் செய்கிற கிரியைக்கும் பொறுமை தேவை.

இன்று நீங்கள் எதிர்கொள்ளும் சோதனைகள் உங்கள் முடிவு அல்ல; தேவன் உங்களை மதிப்புமிக்க ஒரு ‘‘ஆவிக்குரிய வைரம்’’ போல வடிவமைத்துக் கொண்டிருக்கிறார். (தொடரும்)

# ஜெபிக்கலாம் வாங்க!

செப்டம்பர் 2026

ஜெபம் : ஞானி

## இரயில் விபத்துகள்

இரயில் விபத்துகள் அதிகரித்து வருவது பொதுமக்களிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது. அஸ்ஸாம் (ஜூன் 2026) மற்றும் ஜார்கண்டில் (ஜனவரி 2026) நடைபெற்ற சமீபத்திய இரயில் விபத்துகளைத் தொடர்ந்து, பாதுகாப்பை மேம்படுத்த இந்திய இரயில்வே **'Kavach 4.0'** தானியங்கி மோதல் தடுப்பு அமைப்பை மேலும் பல வழித்தடங்களில் விரிவுபடுத்தி வருகிறது. தொடர்ந்து நிகழ்ந்து வரும் இரயில் விபத்துகள் தடுக்கப்படவும், இந்திய இரயில்வே அதிகாரிகள் ஞானத்துடன் செயல்படவும் ஜெபிப்போம்.



## சைபர் மோசடிகள் மற்றும் டிஜிட்டல் ஏமாற்றுகள்

போலி வேலைவாய்ப்பு மோசடிகள், முதலீட்டு மோசடிகள், **OTP** மோசடிகள் மற்றும் **Phishing Attack**-கள் அதிகரித்து வருகின்றன. இதில் மாணவர்கள் மற்றும் இளம் தொழில்முனைவோர் அதிகமாகப் பாதிக்கப்படுகின்றனர். மக்கள் இணைய மோசடிகளிலிருந்து பாதுகாக்கப்படவும், அவர்களின் தனிப்பட்ட தகவல்களும் பணமும் பாதுகாக்கப்படவும் ஜெபிப்போம்.



## விவசாயம்

செப்டம்பர் மாதம் காரிஃப் பயிர்களின் வளர்ச்சி மற்றும் பராமரிப்பிற்கு மிகவும் முக்கியமான காலமாகும். இந்தக் காலத்தில் நெல், கரும்பு, பருத்தி போன்ற பயிர்கள் நன்றாக வளர்வதற்கு போதுமான மழை அவசியமாகும். மழை குறைவாகவோ அல்லது அதிகமாகவோ பெய்தால் பயிர்கள் பாதிக்கப்பட்டு விளைச்சல் குறைய வாய்ப்புள்ளது. எனவே, பருவமழை சீராகப் பெய்ய வேண்டும் என்று விவசாயிகள் எதிர்பார்த்து வருகின்றனர். நாட்டின் பல பகுதிகளில் பயிர்கள் சேதமடையாமல் பாதுகாக்கப்படவும், பருவமழை சரியான நேரத்தில் தேவையான அளவில் பெய்யவும், விவசாயிகள் தங்கள் உழைப்பிற்கு ஏற்ற நல்ல விளைச்சலையும் வருமானத்தையும் பெறவும் ஜெபிப்போம்.



## ஆன்லைன் மருந்து விற்பனை

சமீபத்தில் மதுரை, திருச்சி மற்றும் கோயம்புத்தூரில், மருத்துவரின் பரிந்துரையின்றி கட்டுப்பாட்டில் உள்ள மருந்துகள், நூற்றுக்கணக்கான போதைத் தன்மை கொண்ட மாத்திரைகள், மருத்துவக் குப்பிகள் (Vials) மற்றும் ஊசிகளை ஆன்லைன் மற்றும் கூரியர் சேவைகள் மூலம் சட்டவிரோதமாக விற்பனை செய்த கும்பலை போலீசார் கைது செய்தனர். இந்த மருந்துகள் இளைஞர்கள், கல்லூரி மாணவர்கள் மற்றும் தினக்கூலி தொழிலாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டது விசாரணையில் தெரியவந்துள்ளது. சட்டவிரோதமாக போதைத் தன்மை கொண்ட மருந்துகளை விற்பனை செய்யும் மாஃபியாக்கள் முற்றிலும் ஒழிக்கப்பட ஜெபிப்போம்.





## செயற்கை போதைப்பொருட்கள்

**LSD, Methamphetamine, Ketamine** போன்ற செயற்கை போதைப்பொருட்களின் பயன்பாடு இளைஞர்களிடையே அதிகரித்து வருகிறது. இப்போதைப்பொருட்கள் உடல் மற்றும் மனநலத்தை கடுமையாக பாதிப்பதோடு, அடிமைத்தன்மையையும் உருவாக்குகின்றன. இதனைத் தடுக்க அரசு மற்றும் பல்வேறு அமைப்புகள் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. செயற்கை போதைப்பொருட்களின் உற்பத்தி, விற்பனை மற்றும் கடத்தல் முற்றிலும் ஒழிக்கப்படவும், குறிப்பாக இளைஞர்கள் தவறான போதைப்பழக்கங்களிலிருந்து விடுதலை பெறவும் ஜெபிப்போம்.




## நீட் தேர்வு

இந்த ஆண்டு நடைபெற்ற NEET தேர்வில் 22 **லட்சத்திற்கும் மேற்பட்ட** மாணவர்கள் தேர்வு எழுதியுள்ளனர். தேர்வு முடிவுகள் வெளியானதைத் தொடர்ந்து, மாணவர்கள் மருத்துவக் கல்லூரி சேர்க்கை, Counselling செயல்முறை, அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் இடம் பெறுதல், கல்விச் செலவுகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் போன்ற பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர். மேலும், எதிர்பார்த்த மதிப்பெண் அல்லது தரவரிசை கிடைக்காததால் சில மாணவர்கள் மன அழுத்தத்தையும் ஏமாற்றத்தையும் சந்தித்து வருகின்றனர். NEET தேர்வு எழுதிய மாணவர்கள் சரியான வழிகாட்டுதலைப் பெற்று தங்களுக்கேற்ற கல்லூரி மற்றும் படிப்பில் சேரவும், மன அமைதியுடனும் நம்பிக்கையுடனும் எதிர்காலத்தை எதிர்கொள்ளவும், மருத்துவத் துறையில் சேவை செய்ய விரும்பும் மாணவர்களுக் தேவன் தகுந்த வாயில்களைத் திறந்து, அவர்களின் கல்விப் பயணம் ஆசீர்வதிக்கப்படவும் ஜெபிப்போம்.

## வெப்ப அலை (Heatwave)

இந்த ஆண்டு ஏப்ரல் முதல் ஜூன் மாதங்கள் வரை வட, மத்திய மற்றும் வடமேற்கு இந்தியாவின் பல பகுதிகளில் கடுமையான வெப்ப அலை பதிவாகியுள்ளது. சில இடங்களில் வெப்பநிலை 45°C **முதல்** 48°C **வரை** உயர்ந்துள்ளது. இந்தியாவில் வெப்பம் தொடர்பான காரணங்களால் நாளொன்றுக்கு சராசரியாக 3,400-**க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்படுவதாக** கூறப்படுகிறது. மேலும், வெப்பப் பக்கவாதம், குடிநீர் தட்டுப்பாடு, மின்சாரப் பயன்பாடு அதிகரிப்பு மற்றும் விவசாய உற்பத்தி பாதிப்பு போன்ற பிரச்சினைகளும் ஏற்பட்டுள்ளன. நாட்டில் ஏற்பட்டிருக்கும் கடுமையான வெப்ப அலையின் தாக்கம் குறையவும், போதுமான மழை பெய்து விவசாயிகளும் அன்றாட உழைப்பாளர்களும் பாதிக்கப்படாமல் காக்கப்படவும் ஜெபிப்போம்.



## தற்கொலை

இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் 1,70,000-**க்கும் மேற்பட்டோர்** தற்கொலை செய்து கொள்வதாகப் பதிவாகியுள்ளது. தற்கொலை செய்து கொள்பவர்களில் சுமார் 70–75% **பேர் ஆண்கள்**. ஆண்டுதோறும் சுமார் 10 **ஆயிரம் முதல்** 13 **ஆயிரம் வரையிலான** மாணவர்கள் மன அழுத்தம், தனிமை, குடும்பப் பிரச்சினைகள், கல்வி மற்றும் பொருளாதார அழுத்தங்கள் போன்ற பல்வேறு காரணங்களால் தற்கொலை செய்து கொள்வதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் மனநலத்தில் வலுவடையவும், தேசத்தில் தற்கொலைகள் குறைந்து மக்கள் நம்பிக்கையுடன் வாழ தேவன் கிருபை செய்யும்படி ஜெபிப்போம்.



தகவல் : ஜோயல்

# SOUL DETOX:

இந்தக் கடைசி நாட்களில், நம் எதிராளியான பிசாசு வாலிபர்களை தேவனிடமிருந்து தூரப்படுத்த பயன்படுத்தும் ஒரு கூர்மையான ஆயுதம் இசையாகும். பிசாசு பொய்க்குப் பிதாவானவன். இசை நம் வாழ்க்கையில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் வல்லமை கொண்டது. நாம் கேட்கும் பாடல்களின் வார்த்தைகள், காட்சிகள், கருத்துகள் மற்றும் செய்திகள், நமது சிந்தனை, உணர்வுகள், பழக்கவழக்கங்கள், வாழ்க்கைமுறை ஆகியவற்றை மெதுவாக மாற்றக்கூடியவை.

**இன்றைய உலகப்பிரகாரமான (Secular) இசைகள் பெரும்பாலும் தவறான வார்த்தைகள், ஒழுக்கமற்ற கருத்துகள், எதிர்மறையான சிந்தனைகள், வன்முறை, காம இச்சைகள், பெருமை, பழிவாங்கும் மனப்பான்மை மற்றும் வேதாகமத்திற்கு முரணான, தேவன் அருவருக்கும் கலாச்சாரங்களை ஊக்குவிக்கின்றன. இவற்றைத் தொடர்ந்து கேட்பது நமது ஆவிக்குரிய வாழ்க்கையை மெதுவாகச் சிதைத்துவிடும்.**

அதுமட்டுமல்லாமல், தற்போது நடைபெறும் பல இசை நிகழ்ச்சிகளில் (Concerts), சாத்தானின் அடையாளங்களையும் அந்திக்கிறிஸ்துவின் சின்னங்களையும் வெளிப்படையாகப் பயன்படுத்துவதோடு, இயேசு கிறிஸ்துவையும் சிலுவையையும் கேலி செய்து, பல இசைக் கலைஞர்களும் திரைப்படப் பிரபலங்களும் தேவனை அவமதிக்கின்றனர். சிலர் தாங்கள் Lucifer-உடன் உடன்படிக்கை செய்தவர்கள் என்றும் பொதுவெளியில் கூறியுள்ளனர். இப்படிப்பட்ட இசையையும் அதன் செய்திகளையும் தொடர்ந்து ஏற்றுக்கொள்வது, நம் இதயத்தின் கதவுகளை தீய தாக்கங்களுக்கு திறந்து வைப்பதாக அமையக்கூடும்.






## தவறான இசையின் தாக்கங்கள்

கெட்ட வார்த்தைகளையும் ஒழுக்கமற்ற பேச்சையும் இயல்பானதாக மாற்றுகிறது. அசுத்தமான மற்றும் எதிர்மறையான வார்த்தைகள் நமது பேச்சு, சிந்தனை, மனநிலை ஆகியவற்றைப் பாதிக்கின்றன.

கோபம், வெறுப்பு, காம இச்சை, பழிவாங்கும் மனப்பான்மை போன்ற எதிர்மறையான எண்ணங்களைத் தூண்டுகிறது.

தேவன் விரும்பாத காரியங்களை தொடர்ந்து கேட்கும்போது, அவை இயல்பானவை என்ற எண்ணம் உருவாகலாம். உலகத்தின் கலாச்சாரங்கள் தேவனுடைய சத்தியத்தைவிட முக்கியமானதாகத் தோன்ற ஆரம்பிக்கலாம்.

நமது அடையாளத்தையும் மதிப்புகளையும் மெதுவாக மாற்றிவிடுகிறது.

Trendu, Gethu என்ற எண்ணத்தில் இப்படிப்பட்ட இசையை விரும்பிக் கேட்கும் பலர், சமாதானத்தை இழந்து, மனஅழுத்தம், தனிமை, பயம், தூக்கமின்மை, ஆன்மீகப் போராட்டங்கள், தற்கொலை எண்ணங்கள் போன்றவற்றால் போராடுவதை காணலாம்.

## Detox-க்கான வழிகள்

### 1. தீமையை அகற்றி, நன்மையால் நிரப்புங்கள்

தவறான இசையைக் கேட்பதை நிறுத்துவது மட்டுமல்ல (Unsubscribe the channel, Unfollow the artist, Delete your playlist), தேவனை மகிமைப்படுத்தும் துதி மற்றும் ஆராதனைப் பாடல்களால் உங்கள் Playlist-ஐ நிரப்புங்கள்.

(வேதாகமத்திற்கு முரணான உபதேசங்களைப் பரப்புகிறவர்கள் எவ்வளவு அழகாகப் பாடல்களை இயற்றிப் பாடினாலும், அது தேவனை மகிமைப்படுத்தும் இசையாக இருக்காது.)

### 2. வார்த்தைகளைக் கவனியுங்கள்

ஒரு பாடலைக் கேட்பதற்கு முன் உங்களையே கேட்டுக்கொள்ளுங்கள்:

“இந்தப் பாடல் என் மனதைச் சுத்தமாக்குகிறதா? அல்லது என் ஆவிக்குரிய வாழ்க்கையை பலவீனப்படுத்துகிறதா?”

### 3. நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்

கிறிஸ்தவப் பாடல்களாக இருந்தாலும், அவற்றைப் பாடுகிறவர்களின் கனிகளையும், அவர்களுடைய உபதேசங்களையும் வேதாகமத்தின் அடிப்படையில் சோதித்துப்பார்த்து, நலமானதை மட்டும் பிடித்துக்கொள்ளுங்கள்.

“எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்.” (I தெசலோனிக்கேயர் 5:21)

### 4. தேவனுடைய சத்தத்திற்கு முக்கியத்துவம் கொடுங்கள்

வேத வாசிப்பு, ஜெபம் மற்றும் ஆராதனையின் மூலம் உங்கள் மனதை தேவனுடைய சத்தியத்தால் நிரப்புங்கள். தேவனுடைய சத்தம் உங்கள் வாழ்க்கையில் அதிகமாகக் கேட்கும்போது, உலகத்தின் சத்தங்கள் தானாகவே பலவீனமடையும்.

# ஆசிரியர் தினம்

## ஆசிரியர் தினம் உருவானது எப்படி?

ஆசிரியர்களின் அர்ப்பணிப்பையும், கல்விக்காக அவர்கள் ஆற்றும் சேவையையும் மதித்து கௌரவிக்கும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 5 அன்று ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகிறது. இந்த நாள், டாக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் (Dr. Sarvepalli Radhakrishnan) அவர்களின் பிறந்தநாளை நினைவுகூரும் நாளாகும்.



- அவர் ஒரு சிறந்த ஆசிரியர், தத்துவஞானி மற்றும் இந்தியாவின் இரண்டாவது குடியரசுத் தலைவர் ஆவார்.
- ஒருமுறை, அவருடைய மாணவர்கள் அவரது பிறந்தநாளைக் கொண்டாட விரும்பியபோது, அவர், “எனது பிறந்தநாளை தனிப்பட்ட முறையில் கொண்டாடுவதற்குப் பதிலாக, அதை ஆசிரியர் தினமாகக் கொண்டாடுங்கள்” என்று கூறினார்.
- அதன் அடிப்படையில், 1962 முதல் இந்தியாவில் ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

## ஆசிரியர்களின் முக்கியத்துவம்



### 1. அறிவின் வழிகாட்டிகள்

ஆசிரியர்கள் புத்தக அறிவை மட்டுமல்ல, வாழ்க்கைக்குத் தேவையான அறிவையும் கற்றுக்கொடுக்கிறார்கள்.

### 2. எதிர்காலத்தை உருவாக்குபவர்கள்

ஒரு நல்ல ஆசிரியர், நல்ல தலைமுறையை உருவாக்குகிறார்.

### 3. ஒழுக்கமும் மதிப்புகளும் கற்றுக்கொடுப்பவர்கள்

மரியாதை, பொறுப்பு, நேர்மை போன்ற உயர்ந்த பண்புகளை மாணவர்களிடம் விதைக்கிறார்கள்.

### 4. பொறுமையின் எடுத்துக்காட்டு

ஒவ்வொரு மாணவரையும் பொறுமையுடனும் அக்கறையுடனும் வழிநடத்தி வளர்க்கிறார்கள்.

### 5. மறைந்திருக்கும் திறமைகளை வெளிக்கொணர்பவர்கள்

மாணவர்களின் தனித்திறமைகளைக் கண்டறிந்து, அவற்றை வளர ஊக்குவிக்கிறார்கள்.

### 6. வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்ளத் தயார்படுத்துபவர்கள்

வெற்றியையும் தோல்வியையும் எவ்வாறு சமநிலையுடன் எதிர்கொள்வது என்பதை கற்றுக்கொடுக்கிறார்கள்.

# கற்றுக்கொள்!



அருள் ஒரு கிறிஸ்தவ வாலிபன். கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தான். சமூக ஊடகங்களில் பல மணி நேரங்களைச் செலவிடுவான். புதிய வீடியோக்கள், புதிய பதிவுகள், புதிய தகவல்கள்—எல்லாவற்றையும் தெரிந்துகொள்வதில் அவனுக்கு அதிக ஆர்வம் இருந்தது. ஆனால் வேதாகமத்தை வாசிப்பதற்கோ, வாழ்க்கைக்குத் தேவையான நல்ல பாடங்களையும் திறமைகளையும் கற்றுக்கொள்வதற்கோ அதிக நேரம் ஒதுக்கவில்லை.

ஒருநாள் இளைஞர் கூட்டத்தில் போதகர் ஒரு கேள்வியைக் கேட்டார். **“நீங்கள் தினமும் எவ்வளவு நேரம் புதிய விஷயங்களைக் கற்றுக்கொள்கிறீர்கள்?”** பலர் பலவிதமான பதில்களைக் கூறினர். ஆனால் அந்தக் கேள்வி அருளின் மனதில் ஒரு சிந்தனையை ஏற்படுத்தியது.



**“நான் உண்மையில் என்ன கற்றுக்கொள்கிறேன்?”**

அன்று இரவு தனது கைப்பேசியில் இருந்த Screen Time அறிக்கையைப் பார்த்தான். தினமும் பல மணி நேரங்களை வீடியோக்கள் பார்ப்பதிலும், சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதிலும், அரட்டை அடிப்பதிலும் செலவிட்டிருப்பதை உணர்ந்தான். ஆனால் தேவனுடைய வார்த்தையை வாசிப்பதற்கும், புதிய திறமைகளைக் கற்றுக்கொள்வதற்கும் மிகக் குறைந்த நேரம்தான் ஒதுக்கியிருந்தான்.

அடுத்த நாளிலிருந்து, தினமும் வேதாகமம் வாசிக்க வேண்டும். ஒரு புதிய திறமையைக் கற்றுக்கொள்ள வேண்டும். நல்ல புத்தகங்களைப் படிக்க வேண்டும். அனுபவமுள்ளவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஒரு உறுதியான முடிவெடுத்தான்.

நாட்கள் கடந்தன. அவனுடைய சிந்தனை மாறியது. பேச்சு மாறியது. வாழ்க்கை மாறியது. முன்பு நேரத்தை வீணாக்கியவன், இப்போது ஒவ்வொரு நிமிடத்தையும் பயனுள்ளதாகப் பயன்படுத்தினான். சபையிலும், கல்லூரியிலும், குடும்பத்திலும் நல்ல சாட்சியாக வளர்ந்தான்.



ஒருநாள் அவனுடைய நண்பன் கேட்டான்: **“அருள், உன்னிடம் இந்த மாற்றம் எப்படி வந்தது?”**

**“நேரம் கிடைத்தால் பொழுதுபோக்கைக் கற்றுக்கொள்ளலாம். ஆனால் வாழ்க்கையை மாற்ற வேண்டுமென்றால் நல்லவற்றைக் கற்றுக்கொள்ள வேண்டும். குறிப்பாக, தேவனுடைய வார்த்தையிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டும்”** என்று அருள் புன்னகையுடன் பதிலளித்தான்.

**அன்பான வாலிபர்களே,** கற்றுக்கொள்வதை நிறுத்தும் வாலிபன் தனது வளர்ச்சியை நிறுத்துகிறான். ஆனால் தொடர்ந்து கற்றுக்கொள்கிற வாலிபன், தேவன் தனக்காகத் திட்டமிட்ட உயரத்தை நிச்சயமாக அடைவான்.

“ஆலோசனையைக் கேள், புத்திமதியை ஏற்றுக்கொள்;
அப்பொழுது உன் முடிவிலே ஞானமுள்ளவனாவாய்”

(நீதிமொழிகள் 19:20).

# IGNITERS

## Monthly Fellowship

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த

**ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!**

## EVERY 1st SUNDAY (6TH SEP)

**MUMBAI – DHARAVI (5PM – 7:30PM)**
World Revival Prayer Centre, 2nd Floor, Above Balakrishna Farsan Mart, Opp. Apna Restaurant, Near Kamarajar School, 90 Feet Road,
9004882470

**VELLORE (3PM)**
World Revival Prayer Centre,
Ajantha Mahal,
# 3, 6th West Cross Road,
Gandhi Nagar
9442885315 | 9442979556

**TIRUPUR (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre,
#62, 2nd Floor,
Benny Kumaran Main Road.
9442885315

**TUTICORIN (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre, Jehovah Jireh Towers, 51/8D/3, 1st Floor,
Tiruchendur Road,
Muniasamypuram
Land mark: South Police Station to Kamaraj College Rd.
9750955548 | 9786212103

**TIRUPATI (3PM)**
World Revival Prayer Centre,
Unlimited Show Room (Opp.)
7989295442 | 9488938305

## EVERY 2ND SATURDAY (12TH SEP)

**DELHI (3 PM TO 5 PM)**
World Revival Prayer Centre,
Plot 152, Pratap Nagar
Near Hari Nagar bus depot
New Delhi - 110064
7217663240

## EVERY 2ND SUNDAY (13TH SEP)

**BANGALORE(3PM-5PM)**
World Revival Prayer Centre,
57/2 Thomasappa layout (Opp)
Lumbini Garden Bus Stand Outer Ring Road, Veerannapalaya
(Nagavara)
9791444788 | 080 35 45 45

**SANKARANKOIL (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre,
Sekihnah Mahal, Mullai Nagar.
9750955548 | 8344949555

**AMBUR (3PM-6PM)**
Concordia Hr.Sec. School,
Opp Rly.Station
9597927799 | 9442885315

**MULUND (5PM - 7:30PM)**
Shekinah NLA Church,
Vijay Nagar, Near Vani Vidyalaya School, Mulund-West
9004882470

**THANJAVUR (3PM)**
World Revival Prayer Centre,
Near Balaji Nagar Bus Stop,
18B, TPS Nagar, MC Road
9489775075 | 9444381971

**KOVILPATTI (2:30PM -5:30PM)**
St. Paul's Matriculation School
(Parking area Building)
9677858766 | 9787322334

**ALANGULAM (2:30PM)**
D. No. 5/2, Vaanjinathan Street,
North side of TPV Mill,
Thuththikulam Road,
9750955548 | 9965377427

**THENI (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre,
#203, Madurai Road,
Opp. Anantham Silk, Dr. Kamaraj Hospital, 1st Floor
9750955548 | 9976766422

**SURANDAI (2:00PM)**
Jawaharlal Middle School
9443962141 | 9750955548

**SATHANKULAM (3PM -5:30PM)**
Hendry Matric Higher Secondary School, Mela Sathankulam.
9442885315 | 9786212103

**CHENGALPET (3PM – 5:30PM)**
Reheboth Church,
Near old bus stand,
9710809626 |9488475315

**NAMAKKAL (3PM -5:30PM)**
World Revival Prayer Centre,
16B Naveen Nest Apartment,
Podhigai Nagar, 1st street,
Salem Road, Namakkal-637001
9962085523 | 94886 18305

**POLLACHI (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Grace Auto, 1st floor,
163, Raja mill road, Pollachi,
9486037586 | 9487856205

**VILLUPURAM (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre,
HH Complex, Namnadu Textiles,
Opp., Shanthi Theater Rd
8870517324 | 834411022

**ERODE (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre,
#216, 1st Floor,
Near Fire Service, Gandhiji Road
9750722000

## EVERY 3RD SATURDAY (20TH SEP)

**MYSORE (3:30PM - 6PM)**
World Revival Prayer Center,
3818, 14th Cross, St. Mary's Road,
FTS Circle, N.R. Mohalla.
9962085523 | 9886311777

## EVERY 3RD SUNDAY (21TH SEP)

**SALEM (3PM - 6PM)**
Karunya Prayer Hall,
76/67, Near Thinathanthi office,
opp. Gandhi Stadium, Arisipalayam
9962085523

**TIRUNELVELI (2:30 PM)**
World Revival Prayer Centre,
Shah Complex, #43/R4,
Rajendra Nagar, Trivandrum Road
9750955548 | 9047480484

**SIVAKASI (3PM -5PM)**
World Revival Prayer Centre,
HOREB Complex,
1st Floor, P K N Road,
(Near Rathna vilas Bus Stop)
9677858766 | 9442906567

**TIRUPORUR (3 PM - 6 PM )**
Come compassion Centre,
Mettuthandalam, Tiruporur.
9710809626

**COIMBATORE (4 PM)**
World Revival Prayer Centre,
#90, 1st Floor, Arts College Road,
Near Charan Tower,
9894399599 | 9442885315

**TRICHY (3 PM)**
World Revival Prayer Centre,
22A, 1st Floor,
Thennur High Road,
Near KMC Bus Stop, Thennur.
9489775075 | 8344119000

**CHENNAI (3 PM)**
World Revival Prayer Centre,
Prince Kushal Towers,
7th Floor B-Wing,
Adjacent to LIC Metro,
Mount Road,
9488475315

**JEBAMALAI (2 PM)**
Keelamathapuram, Kadaiyam (via),
Tenkasi Dist.
8300131000 | 9750955548

**TIRUVARUR (3:30PM)**
World Revival Prayer Centre,
1S.A. Rice Mill Complex,
TTP Main Rd,
9976766322 | 7373374733

**RANIPET (3PM-6PM)**
World Revival Prayer Centre,
Railway Station Road,
Zion Nagar,
Near Scudder Memorial Hospital
9500283179

**NAGERCOIL (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
NO: 1055 K.P ROAD,
Milk Depot Junction, Nagercoil
7598155503 | 9750955548

**PONDICHERRY (5PM TO 7PM)**
World Revival Prayer Centre,
Kottupalayam Lawspet,
opp. Latha Steel, E C R Road.
8344433800 | 9962085523

**CHITTOOR (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Kamlambal Street, Readspet,
Kangareddy palli,
9487734603

**THIRUVALLUR (3PM -5:30PM)**
World Revival Prayer Centre,
H S R Tower,
2nd Floor, Near CSI Gowdi Church
9488475315

## EVERY 4TH SUNDAY (27TH SEP)

**KARUR (3PM-5:30PM)**
CSI Boys High schools,
Jawahar Bazzar, Bunglaw Street, Karur.
9489775075

**MUMBAI-MALAD (4PM – 6PM)**
Bethel Ground Floor,
305/E, Mith Chauky,
Marve Road, Malad (W)
9664050567 | 9619996976

**PERNAMPET (3PM TO 6PM)**
Revival Prayer centre, VK Road.
9442885315

**THISAYANVILAI (2:30PM - 5:30PM)**
World Revival Prayer Centre,
Near ML Hospital, Thisayanvilai.
9487810845 | 9750955548

**MADURAI (3PM -5:30PM)**
Devanukae Mahimai Church,
Nearby MGM Plaza,
[Theekadir Busstop] 41, K.Salai pudur
Byepass Road, Madurai
9750955548

**உங்கள் பகுதியில் நடைபெறும் Fellowshipல் தவறாமல் கலந்து கொள்ளுங்கள்; எழுப்புதலைப் பற்ற வைப்போர்களாய் மாறுங்கள்!**

# அடர்ந்த காட்டில் ஒளிர்ந்த சமாதானக் குழந்தை!!

அந்தச் செய்தி இளைஞரான டான் ரிச்சர்ட்சன் (Don Richardson) அவர்களின் இருதயத்தை ஆழமாகத் தொட்டது. “நான் அந்த மக்களிடம் செல்ல வேண்டும்” என்ற தேவனுடைய அழைப்பை அவர் தெளிவாக உணர்ந்தார். அதே அழைப்பைப் பெற்ற கரோல் (Carol Richardson) என்ற இளம் பெண்ணைத் திருமணம் செய்தார். 1962-ஆம் ஆண்டு, டானும் கரோலும் தங்களுடைய சிறு குழந்தையுடன் நியூ கினியாவில் வாழ்ந்த சாவி (Sawi) இன மக்களிடம் மிஷனெரி ஊழியம் செய்வதற்காகப் புறப்பட்டுச் சென்றனர்.


சாவி மக்கள் மிகவும் கொடூரமான பழக்கவழக்கங்களைக் கொண்டிருந்தனர். மனிதத் தலைகளை வேட்டையாடுதல், நரமாமிசம் உண்ணுதல், நண்பர்களைப் போல நடித்துப் பின்னர் வஞ்சித்துக் கொல்வது போன்ற செயல்களை வீரத்தின் அடையாளமாகக் கருதினர். அடர்ந்த காடுகள், சதுப்பு நிலங்கள், மலேரியா, முதலைகள், விஷப்பூச்சிகள் என அபாயங்கள் நிறைந்த பகுதியில் அவர்கள் வாழ்ந்தனர்.

பலர், “இப்படிப்பட்ட இடத்தில் எப்படி வாழப் போகிறீர்கள்?” என்று கேட்டனர். ஆனால் டான் ஒரு விஷயத்தை மட்டும் உறுதியாக நம்பினார். தேவன் தன்னை அழைத்திருந்தால், அவர் நிச்சயமாகப் பாதுகாப்பார்.

ஒருநாள், டான் தனது மனைவியுடனும் இரண்டு சிறு குழந்தைகளுடனும் ஆற்றில் படகில் பயணித்துக்கொண்டிருந்தபோது, படகு திடீரெனக் கவிழ்ந்தது. முதலைகள் நிறைந்த ஆழமான நீரில் அனைவரும் மூழ்கத் தொடங்கினர். அந்த நேரத்தில் டான், “ஆண்டவரே, உதவி செய்யும்!” என்று கதறி ஜெபித்தார். தேவனுடைய கிருபையால் தனது மனைவியையும் குழந்தைகளையும் உயிருடன் மீட்டார். அந்த நாளில், தேவன் தம்முடைய ஊழியக்காரர்களைக் கைவிடமாட்டார் என்பதை அவர் மீண்டும் அனுபவப்பூர்வமாக உணர்ந்தார்.

அதன்பிறகு புத்தகமோ, ஆசிரியரோ, மொழிபெயர்ப்பாளரோ இல்லாமல், ரிச்சர்ட்சன் தம்பதியினர் சாவி மொழியைக் கற்கத் தொடங்கினர். மிகவும் சிக்கலான அந்த மொழியில் ஒவ்வொரு வினைச்சொல்லுக்கும் (verb) 19 கால வடிவங்கள் (tenses) இருந்தன. தினமும் 8 முதல் 10 மணி நேரம் வரை பயின்று, டான் அந்த மொழியில் தேர்ச்சி பெற்றார். அவர்களின் விடாமுயற்சியால் சாவி மொழிக்கு எழுத்துமுறை உருவாக்கப்பட்டு, பின்னர் புதிய ஏற்பாடும் அந்த மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது.

பல ஆண்டுகள் உழைத்தபிறகு, இயேசு கிறிஸ்துவின் அன்பையும் இரட்சிப்பையும் அவர்களுக்கு அறிவிக்கத் தொடங்கினார்.





ஆனால் ஒரு பெரிய சிக்கல் ஏற்பட்டது... இயேசுவைக் காட்டிக்கொடுத்த யூதாஸ்காரியோத்தின் கதையைச் சொன்னபோது, அவர்கள், "யூதாஸ்தான் உண்மையான வீரன்!" என்று மகிழ்ச்சியடைந்தனர். காரணம், வஞ்சித்து வெல்வது அவர்களுடைய கலாச்சாரத்தில் பாராட்டப்பட்ட ஒரு செயலாக இருந்தது.

இதைக் கண்ட டான், "இந்த மக்களுக்கு சுவிசேஷத்தை எப்படிப் புரியவைக்க முடியும்?" என்று மனமுடைந்து தேவனிடம் கதறி ஜெபித்தார்.

அந்த நேரத்தில், சாவி மக்களின் இரண்டு கிராமங்களுக்கு இடையே நடைபெற்ற ஒரு சமாதான ஒப்பந்தத்தை டான் ஆச்சரியத்துடன் கவனித்தார்.

ஒரு கிராமத்தின் தலைவர் தனது சிறு குழந்தையை எதிர் கிராமத்தின் தலைவரிடம் ஒப்படைத்தார். அதேபோல், மற்ற தலைவரும் தனது குழந்தையை அவரிடம் கொடுத்தார். இந்தக் குழந்தைகள் உயிரோடிருக்கும் வரை இரு தரப்பினரும் ஒருவருக்கொருவர் எதிராகப் போரிடமாட்டார்கள். அந்தக் குழந்தைகள் "சமாதானக் குழந்தைகள்" (Peace Child) என்று அழைக்கப்பட்டனர்.

இந்தக் காட்சியைப் பார்த்த டானின் மனதில் திடீரென்று ஒரு புதிய வெளிச்சம் தோன்றியது. அடுத்த முறை சாவி மக்களிடம் பேசும்போது,

"மனிதனுக்கும் தேவனுக்கும் இடையே சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக தேவன் தமது ஒரே குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை இந்த உலகத்திற்கு அனுப்பினார். அவரே தேவன் அளித்த உண்மையான சமாதானக் குழந்தை" என்று கூறினார்.

அப்போது அவர்களுடைய கண்கள் திறந்தன. இயேசுவின் தியாகத்தின் அர்த்தம் அவர்களுக்கு தெளிவானது. யூதாஸ் செய்த துரோகம் எவ்வளவு பெரிய குற்றம் என்பதையும் அவர்கள் உணர்ந்தனர். சில நாட்களிலேயே பலர் இயேசு கிறிஸ்துவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டனர். சூனியம், வன்முறை, நரமாமிசம் போன்ற பழைய வாழ்க்கையை விட்டுவிலகினர்.

1972-ஆம் ஆண்டு, "சமாதான இல்லம்" என்ற பெயரில் ஒரு பெரிய ஆலயமும் கட்டப்பட்டது. தேவனுடைய அழைப்புக்குக் கீழ்ப்படிந்த ஒரே ஒரு மனிதனின் வாழ்க்கை, ஒரு முழு இனத்தின் வரலாற்றையே மாற்றியது.

இன்னும் கிறிஸ்துவை அறியாத கோடிக்கணக்கான மக்கள் நம்மைச் சுற்றி வாழ்கிறார்கள். சாவி இன மக்களிடம் சென்ற டான் ரிச்சர்ட்சனைப் போல, அவர்களிடம் சமாதானத்தின் சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல நாம் தயாரா?

"ஏனெனில், அவரே நம்முடைய சமாதானம்" (எபேசியர் 2:14).



# செய்திகள்!




## நாளொன்றுக்கு 502 பேர்: 2025-ல் விபத்துகளில் 1.8 லட்சம் பேர் உயிரிழப்பு!

புதுடெல்லி: மக்களவையில் மத்திய சாலைப் போக்குவரத்து அமைச்சகம் நேற்று முன்தினம் சமர்ப்பித்த புள்ளிவிவரத்தில் கூறப்பட்டுள்ளதாவது: நாடு முழுவதும் கடந்த 2025-ல் சாலை விபத்துகளில் 1.8 லட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். அதாவது நாளொன்றுக்கு 502 பேர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழப்புகளில் உ.பி.யில் மிக அதிக உயர்வு பதிவாகியுள்ளது. அங்கு 2024-ல் 24,118 ஆக இருந்து உயிரிழப்பு, கடந்த ஆண்டில் 27,550 ஆக உயர்ந்துள்ளது. அதேவேளையில் பஞ்சாபில் சாலை விபத்து மரணம் கணிசமாக குறைந்துள்ளது.

அங்கு 2024-ல் 4,759 ஆக இருந்த உயிரிழப்பு கடந்த ஆண் டில் 3,062 ஆக குறைந்துள்ளது. 2025-ல் விபத்துகளின் எண்ணிக்கை முந்தைய ஆண்டை விட 5.3% அதிகரித்து 5.1 லட்சத்துக்கு மேல்பதிவாகியுள்ளது. மேலும் உயிரிழப்பு 3.5% அதிகரித்துள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. - **25 ஜூலை, இந்து தமிழ் திசை.**




## இந்தியாவில் 6 மாதங்களில் 12.7 லட்சம் சைபர் குற்றங்கள்!

புதுடெல்லி: டிஜிட்டல் அரெஸ்ட், ஆன்லைன் வங்கி மோசடி, ஹேக்கிங், சமூக வலைதள மோசடிகள், ஆன்லைன் நிதி மோசடிகள், வைரஸ் தாக்குதல் உட்பட பல்வேறு வகையான சைபர் குற்றங்கள் அதிகரித்து வருகின்றன.

கடந்த ஜனவரி 1ம் தேதி முதல் ஜூன் 30ம் தேதி வரையிலான 6 மாத காலத்தில் நாடு முழுவதும் சைபர் குற்றங்கள் தொடர்பாக 12.71 லட்சம் புகார்கள் பதிவு செய்யப்பட்டு உள்ளன. இதில் 2.86 லட்சம் புகார்கள் ஆன்லைன் வங்கி பணப்பரிமாற்ற மோசடி தொடர்பானவை.

ஒட்டுமொத்தமாக ரூ.10,178 கோடி மோசடி செய்யப்பட்டு உள்ளது. தமிழகத்தில் நடைபெற்ற 63,116 சைபர் குற்றங்கள் மூலம் ரூ.897.79 கோடி அளவுக்கு மோசடி செய்யப்பட்டு உள்ளது. - **15 ஜூலை, இந்து தமிழ் திசை.**

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

# MOUNT SINAI 2026

## வாலிபர்கள் ஒருநாள் உபவாச ஜெபம்

**ஒரு நாள் முழுவதும் தேசத்திற்காக, வாலிபர்களுக்காக திறப்பிலே நின்று ஜெபிக்ககூடி வருவோம். தேசத்தை சுதந்தரிப்போம்.**

### நவம்பர் 14 சனிக்கிழமை
### காலை 9 - 4 வரை

**சித்தூரில்**

செய்தியும் ஜெபமும்:
சகோ. அவினாஷ்
99620 85523 | 94877 34505



**சென்னையில்**

செய்தியும் ஜெபமும்:
பாஸ்டர் ராஜேந்திரன் (தேனி)
9488475313 | 044-45016562



**நாலுமாவடியில்**

செய்தியும் ஜெபமும்:
சகோ. ஞானேஷ்
9750955547 | 04639 353333



**பெங்களூரில்**

செய்தியும் ஜெபமும்:
சகோ. K. தினகரன்
99620 85523 | 78990 88538



### நவம்பர் 21 சனிக்கிழமை
### காலை 9 - 4 வரை

**மும்பையில்**

செய்தியும் ஜெபமும்:
சகோ. ஜூலஸ் மாசிலாமணி
90048 82470



**ஜெபமலையில்**

செய்தியும் ஜெபமும்:
சகோ. கார்த்தி கமாலியேல்
83001 31000 | 9750955548



**திருச்சியில்**

செய்தியும் ஜெபமும்:
சகோ. ஃப்ரெடி ஜோசப்
94897 75075



**மதுரையில்**

செய்தியும் ஜெபமும்:
பாஸ்டர் பென்னட் கிறிஸ்டோபர்
97509 55548





Registered under the press and
Registration of Periodicals Act, 2023: TNBIL/2010/32847

